தினமணி

**தமிழகத்தில் சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது**



தமிழகத்தில் சாகுபடி பரப்பு 2010-11-ஆம் ஆண்டில் 49.54 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது என தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவையில் புதன்கிழமை தாக்கல் செய்யப்பட்ட இந்திய கணக்குத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சி.ஏ.ஜி.) அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

11-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தரிசு நிலங்களை சாகுபடி நிலங்களாக மாற்றி மண் வளத்தைப் பாதுகாக்க செயல்திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால், 2007-2012 ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில் 24 லட்சம் ஹெக்டேராக இருந்த தரிசு நிலங்களின் பரப்பளவு, 2010-11-ல் 25.95 லட்சம் ஹெக்டேராக அதிகரித்தது. மற்ற காரணங்களுக்காக நிலங்கள் பயன்படுத்தப்படுவதை இது பிரதிபலிக்கிறது.

2007-08-ல் 50.62 லட்சம் ஹெக்டேராக இருந்த சாகுபடி பரப்பளவு 2010-11-ஆம் ஆண்டில் 49.54 லட்சம் ஹெக்டேராகக் குறைந்தது.

11-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி 22 லட்சம் ஹெக்டேரில் நெல், 10 லட்சம் ஹெக்டேரில் பயறு வகைகள், 6.5 லட்சம் ஹெக்டேரில் எண்ணெய் வித்துகள் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், சில மாவட்டங்களில் மட்டுமே இலக்கு எட்டப்பட்டது. பல மாவட்டங்களில் 20 சதவீதத்துக்கும் குறைவாகவே சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

வேளாண் உற்பத்திக்காக வழங்கப்பட்ட மானியம் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. பிற பயிர்களுக்கு வழங்கப்பட்ட மானியம் நெற்பயிர்களுக்கு திருப்பி விடப்பட்டுள்ளது.

ரூ. 3.54 கோடிக்கு தரக் குறைவான விதைகள்: மாநில விதைப் பண்ணைகளால் 29 சதவீதம் வரைதான் தரமான விதைகளை அளிக்க முடிந்தது. மீதமுள்ள தேவைக்கு விவசாயிகள்

தனியார்களை சார்ந்திருக்க வேண்டியதாயிற்று. மாதிரி விதைகளின் ஆய்வு முடிவு தாமதமாக வந்ததால், சந்தையில் ரூ. 3.54 கோடி மதிப்புக்கு தரக் குறைவான விதைகள் விற்பனையாகி உள்ளன.

காப்பீட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் பல குறைபாடுகள் காணப்பட்டன. விவசாயிகளிடம் இருந்து ரூ. 2.59 கோடி அளவுக்கு அதிக தவணை வசூலிக்கப்பட்டுள்ளது. வங்கிகள் அளித்த தவறான அறிக்கையினால், இயற்கை இடையூறுகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நஷ்டஈடான ரூ. 1.11 கோடியை வழங்க முடியவில்லை. கிராம அளவில் விவசாய நிலங்களின் உரிமையை பதிவேட்டில் போலியாக மாற்றி, ரூ. 25.58 கோடி காப்பீட்டுத் தொகை கோரப்பட்டுள்ளது.

காட்டாமணக்குச் செடிகள் நடும் திட்டத்தை நிறைவேற்றாததால் ரூ.1.80 கோடி பயனற்றதாகி விட்டது என சி.ஏ.ஜி. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2 ஆயிரம் சூரிய மின்சக்தி பம்ப்செட்களுக்கு மானியம்: ஜெயலலிதா அறிவிப்பு**

சூரிய மின்சக்தி கொண்ட பம்ப்செட்டுகளுக்கு தலா ரூ.4 லட்சம் மானியம், 2,000 விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

சட்டப் பேரவையில் விதி 110-ன் கீழ் புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு:-

தமிழ்நாடு நீர் பற்றாக்குறை உள்ள மாநிலம் என்பதால், பாசனத்துக்கு இப்போது கிடைக்கும் நீரை வீணாக்காமல் சிக்கனமாக பயன்படுத்தி பயிரிடும் பரப்பை அதிகரித்து அதிக மகசூல் பெறுவது அவசியம். இதைக் கருத்தில் கொண்டு, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் முதலான நுண்ணீர் பாசன அமைப்புகளை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியத்திலும், இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழக அரசு வழங்கி இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

விரைவில் பம்ப் செட்டுகள்: தமிழகத்தில் அதிகரித்து வரும் மின்சாரத் தேவையைக் கருத்தில் கொண்டு, சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை மானியத்தில் வழங்கும் திட்டத்தை எனது தலைமையிலான அரசு முதல் முதலாக சென்ற ஆண்டு அறிவித்தது.

இதனைச் செயல்படுத்தும் வகையில், டெல்டா மாவட்டங்களில் 500 சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்ப்செட்டுகளை 80 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் பணிகள் இப்போது தொடங்கப்பட்டுள்ளன. இந்த பம்பு செட்டுகள் விரைவில் வழங்கப்படும்.

தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த பாசன நீர் மற்றும் எரிசக்தி தேவையைப் பூர்த்தி செய்வது அவசியம். இதைக் கருத்தில் கொண்டு, மின்சாரத்துக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வரும் சூழலில், வேளாண் பாசனத்துக்கு ஒரு சிறந்த மற்றும் நிரந்தரத் தீர்வு காணும் வகையில், சூரிய சக்தியால் இயங்கும் பம்ப் செட்டுகளை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கவும், அதனுடன் நுண்ணீர் பாசன அமைப்புகளை இணைத்தும் ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

நடப்பு நிதியாண்டில், வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு குழாய் கிணறு, ஆழ்குழாய்க் கிணறு, திறந்த வெளி கிணறு மற்றும் தரைமட்ட நீர்த் தேக்க தொட்டியில் இருந்து நீரை இறக்க ஏதுவாக, 80 சதவீதம் மானியத்துடன் கூடிய, 5 குதிரைத் திறன் கொண்ட சூரிய சக்தியால் இயங்கும் சூரிய ஒளியினை முழுமையாகத் தொடர்ந்து பெற ஏதுவாக, நகரும் வகையில் அமையும் சூரிய தகடு பயன்படுத்தப்படும் 2 ஆயிரம் பம்ப் செட்டு அமைப்புகளை வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

ரூ.4 லட்சம் மானியம்: இப்போதுள்ள நுண்ணீர் பாசன அமைப்புகளை நடைமுறையில் உள்ள நெறிமுறைகள் மற்றும் பயிர்களுக்கு ஏற்ற முதன்மை தொழில் நுட்பங்கள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு அமைப்புக்கான செலவு தோராயமாக ரூ.5 லட்சமாகும். அதில், அரசு மானியம் 80 சதவீதம், அதாவது ரூ.4 லட்சமாகும்.

விவசாயியின் பங்களிப்பு 20 சதவீதம். அதாவது ரூ.1 லட்சம். இதற்கென அரசுக்கு ரூ.100 கோடி செலவு ஏற்படும். விவசாயிகளின் பங்களிப்பான 20 சதவீதம் தொகையை விவசாயிகள் நிறுவனத்துக்குச் செலுத்துவதற்கு வசதியாக தேவைப்படும் விவசாயிகளுக்கு நடைமுறையில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு கூட்டுறவு வங்கிக் கடன் வசதி பெறவும் ஏற்பாடு செய்யப்படும் என்றார் முதல்வர் ஜெயலலிதா.

**அதிக நெல் மகசூல் செய்த விவசாயிக்கு பரிசு**

விழுப்புரம் மாவட்டத்திலேயே அதிக நெல் மகசூல் செய்த வல்லம் ஒன்றியம் கடம்பூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி ஏழுமலைக்கு ரூ.5 ஆயிரத்தை வேளாண்மைத்துறை சார்பில் வல்லம் ஒன்றியக்குழுத்தலைவர் கா.அண்ணாதுரை திங்கள்கிழமை வழங்கினார்.

÷வல்லம் ஒன்றியம் வடபுத்தூர் மற்றும் கொரவனந்தல் கிராமங்களில் உழவர் பெருவிழா நடைபெற்றது. விழாவிற்கு வல்லம் ஒன்றியக்குழு தலைவர் கா.அண்ணாதுரை தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் அமுதா வர
வேற்றார்.

÷விழாவில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் ராஜேந்திரன் சிறப்புரையாற்றினார்.

÷நீர் வள, நிலவளத் திட்டத்தின் கீழ் நடுவர்கள் முன்னிலையில் கலந்து கொண்டு அறுவடை செய்த பல்வேறு வட்டார விவசாயிகளுள், விழுப்புரம் மாவட்டத்திலேயே ஏக்கருக்கு 48 மூட்டை நெல் மகசூல் செய்த கடம்பூரைச் சேர்ந்த ஏழுமலைக்கு ரூ.5 ஆயிரத்திற்கான காசோலையை வல்லம் ஒன்றியக்குழு தலைவர் கா.அண்ணாதுரை வழங்கி பாராட்டினார்.

÷மேலும், விவசாயிகளுக்காக 30 மீட்டர் நீளம், 30 மீட்டர் அகலம் 1.5 மீட்டர் ஆழமுள்ள பண்ணைக்குட்டை வெட்டுவதற்கான செலவு ரூ.1.50 லட்சம் முழுவதும் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் மூலம் அரசே முழுமையாக ஏற்கும். இதன்படி விவசாயிகளுக்கு இலவசமாக பண்ணைக்குட்டை வெட்டித் தரப்படும் என்று வேளாண்மை துணை இயக்குநர்

தெரிவித்தார்.

÷வேளாண்மை உதவி இயக்குநர் ரவீந்திரன், அட்மா தலைவர் பன்னீர்செல்வம், பொறியாளர் கலியமூர்த்தி, வேளாண் அலுவலர்கள் கோவிந்தராஜ், ரவி, ரவிச்சந்திரன், அறிவழகன், பாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மீன் வளர்க்க 50 சதவீத மானியம்**

விழுப்புரம் மாவட்டத்தில் மீன் வளர்ப்பவர்களுக்கு 50 சதவீதம் மானிய உதவிகள் வழங்கப்பட உள்ளன என்று ஆட்சியர் வா.சம்பத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம்:

தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2013-14-ம் ஆண்டுக்கு மீன்வளத்துறையின் மூலம் விழுப்புரம் மாவட்டத்தில் பண்ணை அமைத்து மீன்குஞ்சு வளர்க்கும் பண்ணையாளர்கள் இத் திட்டத்தின் கீழ் நன்கு வளர்ந்த மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்ய வேண்டும்.

இந்த மீன் குஞ்சுகளை வளர்த்தெடுக்க ஆகும் செலவுத் தொகையில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும். இந்த மானிய உதவி ரூ.50 ஆயிரம் வரை மட்டுமே அதிகபட்சமாக வழங்கப்படும். மானியத் தொகை மீன்குஞ்சு, மீன் உணவு செலவினம் சேர்ந்ததாகும். இத் திட்டத்தில் மீன் விதைப் பண்ணையின் பரப்பளவு அதிகபட்சமாக 2 ஹெக்டேர் வரை அமைந்திருக்கலாம்.

இத் திட்டம் தொடர்பாக விவரங்கள் மற்றும் விண்ணப்பங்கள் பெற விழுப்புரம், நெ.1, விஸ்வலிங்க ஆச்சாரி லே அவுட்டில் உள்ள மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் உதவி இயக்குநரை அணுகலாம். தொலைபேசி எண்: 04146-224329.

தினமலர்

**வறட்சியால் தீவன தட்டுப்பாடு பிரச்னை கறிக்கு செல்லும் பால் வற்றிய கறவை மாடுகள்**

ஈரோடு: மழையின்றி வறட்சியால் தீவனத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால், நேற்று ஈரோடு மாட்டுச்சந்தையில், 90 சதவீதம் எருமை கன்றுகளும், 10 சதவீதம் பால் வற்றிய மாடுகளும் விற்பனைக்கு வந்து கறிக்காக வியாபாரிகள் வாங்கிச்சென்றனர்.

ஈரோடு கருங்கல்பாளையத்தில் வாரந்தோறும் புதன், வியாழக்கிழமைகளில் மாட்டுச்சந்தை நடக்கிறது. புதன் கிழமை கறிக்காக விற்பனை செய்யப்படும் அடிமாடுகளும், வியாழக்கிழமை கறவை மாடுகளும் விற்பனைக்கு வருகிறது.

கோவை, திருப்பூர், ஈரோடு, மேட்டூர், மேச்சேரி ஆகிய இடங்களில் விற்பனைக்காக மாடுகளை ஓட்டி வருகின்றனர். கறிக்காக வரும் அடிமாடுகளை பெரும்பாலும் கேரளா வியாபாரிகளே வாங்கிச்செல்கின்றனர்.

மாநிலத்தில் கடந்த ஓராண்டாக மழையின்றி வறட்சி காணப்படுகிறது. கால்நடைகளுக்கு தீவனம் மற்றும் மேய்ச்சல் இல்லாமல் விவசாயிகளும், கால்நடை வளர்ப்போரும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

தீவன பற்றாக்குறையால், கடந்த இரண்டு வாரங்களாக, ஈரோடு சந்தைக்கு பால் வற்றிய கறவைகள் மற்றும் எருமை கன்றுகள் வரத்து அதிகரித்துள்ளது. நேற்றைய சந்தைக்கு, 250 எருமை கன்றுகளும், 60 பால்வற்றிய மாடு மற்றும் எருமைகள் விற்பனைக்கு வந்திருந்தன.

கேரளா மாநிலம் கொல்லம், கொச்சி பகுதியை சேர்ந்த வியாபாரிகளும், கோவை, பொள்ளாச்சியை சேர்ந்த வியாபாரிகளும் அதிகப்படியாக வந்து அடிமாடுகளை வாங்கிச்சென்றனர்.

கன்றுகள், 2,400க்கும், மாடுகள், 8,000 ரூபாய் வரையிலும் விற்கப்பட்டது, என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**தண்ணீரின்றி கருகும் கரும்பு பயிர்கள்**

காஞ்சிபுரம்:ஆழ்துளை கிணறுகளில் போதிய நீர் இன்றி, கரும்பு பயிர் கருகி வருவதால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.காஞ்சிபுரம் - அரக்கோணம் சாலையில், படுநெல்லி கிராமம் உள்ளது. இக்கிராமத்தைச் சுற்றி உள்ள கோவிந்தவாடி அகரம், புள்ளலூர், சாமந்திபுரம், மணியாட்சி உள்ளிட்ட கிராமங்களில், 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 450 ஏக்கர் பரப்பளவில்

கரும்பு பயிரிட்டுள்ளனர்.இதில், முதல் பருவ சாகுபடி, கடந்த டிசம்பர் மாதம் முடிந்த நிலையில், தற்போது, இரண்டாம் பருவ சாகுபடி துவங்கி உள்ளது. ஒன்பது மாதங்களில் அறுவடை செய்யக்கூடிய இந்த கரும்பு பயிர்கள், தற்போது, மூன்று மாத பராமரிப்பில் உள்ளன.

கருகும் அபாயம்
இப்பகுதி விவசாயிகள், ஆழ்துளை கிணற்று நீர் மூலம், கரும்பு பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வந்தனர். இந்நிலையில், தற்போது, அங்குள்ள ஆழ்துளை கிணறுகளில், நீர் இன்றி வறண்டு காணப்படுவதால், கரும்பு பயிர்கள் நீரின்றி கருகுகின்றன.இதுகுறித்து, படுநெல்லி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சேகர் கூறுகையில், ""தண்ணீரின்றி கரும்பு பயிர்கள் கருகி வருகின்றன. எனவே, அரசு போர்க் கால அடிப்படையில், புதிய ஆழ்துளை கிணறுகளை அமைக்க மானியத்துடன் கடன் வழங்க வேண்டும். இல்லையெனில், பயிரிடப்பட்டுள்ள கரும்பு பயிருக்கு இழப்பீடு நிவாரண தொகையை வழங்க வேண்டும்," என்றார்.இழப்பீடுஇதுகுறித்து, வேளாண் துறை உயரதிகாரி ஒருவர் கூறுகையில், ""பெரும்பாலான விவசாயிகள், தனியார் சர்க்கரை ஆலை வழங்கும் மானியத்தில், கரும்பு பயிரிட்டு வருகின்றனர். சம்பந்தப்பட்ட இந்நிறுவனங்களில், கரும்பு பயிர் மீது, காப்பீடு தொகை செலுத்தப்பட்டிருக்கும். எனவே, கருகிய பயிர்களை காண்பித்து, விவசாயிகள் இழப்பீடு பெறலாம்," என்றார்.

**"பாகற்காய் சாகுபடியில் மாதம் ரூ.10 ஆயிரம் வருமானம்'**

செய்யூர்:பாகற்காய் பயிரிடுவதன் மூலம், 60 சென்ட் நிலத்தில் மாதம் 10 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கலாம் என, அச்சிறுபாக்கம் விவசாயி தெரிவித்து உள்ளார்.
இது குறித்து, அச்சிறுபாக்கம் ஒன்றியம் வெங்கடேசபுரத்தைச் சேர்ந்த விவசாயி குணசேகர் கூறியதாவது:எனக்கு சொந்தமாக, 1 ஏக்கர் 50 சென்ட் நிலம் உள்ளது. இதில், கடந்த 10 ஆண்டுகளாக பாகற்காய், புடலங்காய் போன்றவற்றை பயிரிட்டு வருகிறேன். பாகற்காய் சாகுபடியில், அதிக லாபம் கிடைப்பதால் தொடர்ந்து பயிரிடுகிறேன். 60 சென்ட் நிலத்தில் பாகற்காய் பயிரிட, 400 கிராம் விதை தேவைப்படும்.நிலத்தை நன்றாக உழுது சமன் செய்து, 4 அடிக்கு 4 அடி இடைவெளியில் குழி எடுக்க வேண்டும்.

ஒரு குழியில், 4 முதல் 5 விதைகள் நட்டு பராமரித்து வரவேண்டும். முதலில் எரு மற்றும் குருணை மருந்து இடவேண்டும். கொடி ஓட துவங்கியதும், கொம்புகளை நட்டு பந்தல் போடவேண்டும்.15

நாட்களுக்கு ஒரு முறை காம்ளக்ஸ், பொட்டாஷ், யூரியா, டி.ஏ.பி., கலந்து இடவேண்டும். 40 முதல் 45ம் நாளில் இருந்து, காய் காய்க்க தொடங்கும். நான்கு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதும். வாரத்தில் மூன்று அல்லது நான்கு முறை காய்களை பறிக்கலாம். ஒரு முறைக்கு, 200 கிலோ கிடைக்கும். தற்போது ஒரு கிலோ 20 ரூபாய்க்கு விலை கிடைக்கிறது.பண்டிகை நாட்களில் கூடுதல் விலை கிடைக்கும். முதல் ஆறு முதல் ஏழு மாதங்கள் வரை பாகற்காய் நன்கு காய்க்கும். இதன் மூலம் சராசரியாக, ஒரு மாதத்திற்கு, 10 ஆயிரத்திற்கு மேல் கிடைக்கும்.ஒரு முறை பந்தல் அமைத்தால், மூன்று ஆண்டுகள் பராமரிக்கலாம். முதல் ஆண்டு பந்தல் அமைக்க, 40 ஆயிரம் வரை செலவாகிறது. அடுத்து வரும் ஆண்டுகளில், விதை மற்றும் பராமரிப்பு செலவுகளை மட்டுமே செய்ய வேண்டும். இதனால், கூடுதல் லாபம் கிடைக்கும். இதனால் நான் தொடர்ந்து, 10 ஆண்டுகளாக பாகற்காய் பயிர் செய்து வருகிறேன்.இவ்வாறு குணசேகர் தெரிவித்தார்.

**எள்ளில் போட்ட பணம் எண்ணெய் ஆகுமா? கோடை வறட்சியால் விவசாயிகள் கலக்கம்**

சி.ஜி.எஸ்.கண்டிகை : கோடை வெயில் கடுமையாக கொளுத்தி வருவதால், எள் பயிர் செய்த விவசாயிகள், கலக்கத்தில் உள்ளனர். அடுத்த, 30 நாட்களுக்கு, எள் செடிகள், வெயிலில் காய்ந்து விடாமல் தப்பித்தால் மட்டுமே, அறுவடை செய்ய இயலும். இல்லாவிட்டால், விதைப்பு செலவு கூட கிடைக்காது என, தெரிவித்தனர்.ஆர்.கே.பேட்டை ஒன்றியம், சி.ஜி.எஸ்.கண்டிகை ஊராட்சியைச் சேர்ந்த விவசாயிகள், எள் விதைத்துள்ளனர். மலைப் பகுதியை ஒட்டிய மானாவாரி நிலங்களில் எள் பயிரிடப்பட்டு உள்ளது. கோடையில் நெல், கரும்பு, வாழை உள்ளிட்டவற்றை பயிரிட தண்ணீர் இல்லாததால், விவசாயிகள் எள் பயிரிட்டுள்ளனர்.ஆர்.கே.பேட்டை ஒன்றியத்தில், 58 ஏக்கர் பரப்பளவில் எள் பயிரிடப்பட்டுள்ளது. எள், பாசன வயல்களில் ஏக்கருக்கு, 500 கிலோவும், மானாவாரி வயல்களில் ஏக்கருக்கு, 200 கிலோவும் மகசூல் அளிக்கும். எள் கிலோ, 80 ரூபாய் முதல், 160 ரூபாய் வரை விற்பனையாகிறது. எள்ளில் இருந்து நல்லெண்ணெய் எடுக்கப்படுகிறது. எள் பயிரிட, அதிக செலவு ஆவது இல்லை. பூச்சி தொல்லை கிடையாது. உரம், பூச்சி மருந்து உள்ளிட்ட செலவுகள் இல்லாததால், மானாவாரி நிலங்களில் எள் அதிகளவில் பயிரிடப்படுகிறது.கோடைக்கு முன்பாக மார்ச் மாதம் எள் விதைக்கப்படும். ஜூன் முதல் வாரத்தில் அறுவடை துவங்கும். எள், வறட்சியை தாங்கி வளரக்கூடியது என்றாலும், தற்போதைய அக்னி நட்சத்திர வெயிலை தாக்குப் பிடிக்க முடியாமல் காய்ந்து வருகின்றன.வரும், 28ம் தேதி வரை, அக்னி நட்சத்திரம் தொடரும் என்பதால், எள் பயிரிட்டுள்ள விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். அடுத்த, 30 நாட்களுக்கு பயிரை காப்பாற்றினால் மட்டுமே, எள்ளை

அறுவடை செய்ய இயலும். இல்லாவிட்டால், விதைத்த செலவு கூட கிடைக்காது என, விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர்.

**24ம் தேதி விவசாயிகள்குறைதீர் கூட்டம்**

திருவள்ளூர்:மாவட்டத்தின் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும், 24ம் தேதி, வெள்ளிக்கிழமை, ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் பிற்பகல், 3:00 மணிக்கு நடைபெறுகிறது.அன்றைய தினம், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை துறை, தோட்டக்கலை, வருவாய் துறை, மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறி யியல், மீன்வளம், கால்நடை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.எனவே, மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு, ஆட்சியர் வீர ராகவ ராவ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**ஆழியூர், பள்ளிநேலியனூர் ஊராட்சிகளில் உழவர் விழா**

கண்டமங்கலம்:கண்டமங்கலம் ஒன்றியத்தில் ஆழியூர் மற்றும் பள்ளிநேலியனூர் ஊராட்சிகளில் உழவர் பெருவிழா நடந்தது.ஆழியூரில் நடந்த விழாவிற்கு ஊராட்சி தலைவர் சுசீலா ராஜேந்திரன் தலைமை தாங்கினார். ஊராட்சி துணைத்தலைவர் அண்ணாமலை வரவேற்றார். முன்னதாக புதுச்சேரி சங்கமம் கலைக்குழுவினரின் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.பள்ளிநேலியனூரில் நடந்த உழவர் பெருவிழாவிற்கு ஊராட்சி தலைவர் சிவசக்தி தமிழ்குடி தலைமை தாங்கினார். ஊராட்சி துணைத்தலைவர் முத்துசாமி வரவேற்றார்.இரு விழாக்களிலும் அரசு சார்பில் விவசாயிகளின் மேம்பாபட்டிற்காக செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் குறித்து விளக்கப்பட்டது.இதில் வட்டார வேளாண் உதவி இயக்குனர் சம்பத், விழுப்புரம் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண் அலுவலர் அரிக்கிருஷ்ணன், வட்டார வேளாண் அலுவலர் கவுஸ், துணை வேளாண் அலுவலர் ராஜதுரை, வட்டார தொழில்நுட்ப மேலாளர் மஞ்சு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.உதவி விதை அலுவலர்கள் தென்னரசு, ஜெயமூர்த்தி, விரிவாக்க உதவியாளர் ரகோத்தமன், உதவி வேளாண்மை அலுவலர்கள் அழகேசன், அந்தோணிசாமி, ராதிகா, விமலா, ரமாதேவி, சதஸ்ரீ ஆகியோர் செயல்முறை விளக்கம் அளித்தனர். ஊராட்சி செயலர்கள் அருணகிரி, சுப்ரமணியன் ஆகியோர் நன்றி கூறினர்.

**கால்நடைகளுக்கு கரும்புத்தோகை தீவனம் வழங்கலாம்: பேராசிரியர் அறிவுரை**

விழுப்புரம்:கால்நடைகளுக்கு கரும்புத் தோகை தீவனம் வழங்கலாம் என விழுப்புரம் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக பேராசிரியர் பழனிவேல் தெரிவித்துள்ளார்.அவர்

வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:கால்நடை பண்ணையின் உற்பத்தி மற்றும் பொரு ளாதாரம், கால்நடைகளுக்கு வழங்கப்படும் தீவனத்தை பொறுத்து உள் ளது. விழுப்புரம் மாவட்டத்தில் மேய்ச்சலை மையமாக வைத்தே கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன.இந்தாண்டு பருவமழை பொய்த்துள்ளதாலும், போதிய மேய்ச்சல் நிலப் பரப்பு குறைந்துள்ளதாலும், கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை ஈடு செய்ய, கால்நடைகளுக்கு கரும்புத் தோகைகளை தீவனமாக வழங்கலாம்.ஒரு ஏக்கர் கரும்பு வயலில் இருந்து 7 ஆயிரம் கிலோ கரும்புத் தோகை உபப்பொருளாகக் கிடைக்கிறது. கரும்பு தோகைகளை 1 முதல் 2 அங்குளம் நீள முள்ள சிறு துண்டுகளாக வெட்டி, ஆயிரம் கிலோ கரும்புத் தோகைக்கு, சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கும் 20 கிலோ கழிவுப்பாகு அல்லது வெல்லம், 10 கிலோ சமையல் உப்பு மற்றும் 10 கிலோ யூரியாவைக் கலந்து குழிகளில் சேமித்து வைக்க வேண்டும்.இவ்வாறு செய்வதன் மூம் 60 முதல் 65 சதவீதம் வரை காய்ந்து போவது தவிர்க்கப்படுகிறது. இந்த தீவனம் ஊட்டச்சத்து மிகுந்துள்ளதால் கால்நடைகளுக்கு சிறந்த உணவாக உள்ளது.இது குறித்து மேலும் தகவல் அறிய விரும்புவோர், விழுப்புரத்தில் உள்ள கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை, 04146-225244 என்ற எண்ணிலோ அல்லது நேரிலோ தொடர்பு கொள்ளாம்.இவ்வாறு உதவி பேராசிரியர் பழனிவேல் தெரிவித்துள்ளார்.

**உழவர் பெருவிழாவில் எம்.பி., பங்கேற்பு**

திருவெண்ணெய்நல்லூர்:திருவெண்ணெய்நல்லூர் கனகா திருமண மண்டபத்தில் வேளாண்துறை சார்பில் உழவர் பெருவிழா நடந்தது.வேளாண் உதவி இயக்குனர் இளவரசன் தலைமை தாங்கினார். அட்மாகுழு தலைவர் பாலசுப்ரமணியன், பேரூராட்சி தலைவர் வெற்றிவேலன், துணைத்தலைவர் சண்முகம் முன்னிலை வகித்தனர். வேளாண் அலுவலர் மகாலட்சுமி வரவேற்றார். ஆனந்தன் எம்.பி., கலந்து கொண்டு பேசினார். முன்னதாக வேளாண்துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி மற்றும் செயல்விளக்கங்களை பார்வையிட்டார். வேளாண் அலுவலர்கள், விவசாயத்தில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர். பின், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, விவசாயிகளுக்கு அறுசுவை விருந்து வழங்கப்பட்டது.அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர் குமார், கூட்டுறவு சங்க தலைவர்கள் சரவணக்குமார், மோகன், சக்திவேல், ரமேஷ், நகர செய லாளர் கேசவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெள்ளையூரில் உழவர் பெருவிழா**

உளுந்தூர்பேட்டை:உளுந்தூர்பேட்டை ஒன்றியம் வெள்ளையூரில் உழவர் பெருவிழா நடந்தது. ஊராட்சி தலைவர் அரபியாபேகம் தலைமை தாங்கினார். கிளை கழக செயலாளர் காசிநாதன், வேளாண் உதவி இயக்குனர் கருணாநிதி வரவேற்றனர். குமரகுரு எம்.எல்.ஏ., கலந்து கொண்டு விவசாயிகளுக்கு உளுந்து விதைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். ஒன்றிய சேர்மன் பாலு, துணை சேர்மன் சாய்ராம், ஒன்றிய செயலாளர் பழனிவேல், வேளாண் அலுவலர் சவிதா, துணை வேளாண் அலுவலர் அலெக்சாண்டர், விரிவாக்க அலுவலர் பொன்காமராஜ், ஆத்மா திட்ட அலுவலர் முத்துலட்சுமி, உதவி வேளாண் அலுவலர்கள் முருகன், வடிவேல்முருகன், அந்தோணிசாமி, வேளாண்மை பொறியியல் மணிவண்ணன், ஆரூரான் சர்க்கரை ஆலை அலுவலர் பன்னீர்செல்வம், ஆத்மா திட்ட கோவிந்தன், ஊராட்சி துணைத் தலைவர் ராமதாஸ், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். சிறுபான்மை பிரிவு அயூப்அலி நன்றி கூறினார்.

**வடசிறுவளூரில் உழவர் பெருவிழா**

சங்கராபுரம்:சங்கராபுரம் அடுத்த வடசிறுவளூரில் உழவர் பெருவிழா நடந்தது.ஊராட்சி தலைவர் மாரியப்பன், ராமராஜாபுரம் ஊராட்சி தலைவர் ஜெய்பூன் அப்துல்லாசா தலைமை தாங்கினர். வேளாண்மை அலுவலர் விஜயகுமார் வரவேற்றார். துணை வேளாண்மை அலுவலர் முத்துகிருஷ்ணன், வேளாண்மை உதவி அலுவலர்கள் பழனிவேல், முகமது நாசர், மைக்கேல், ஜெசுயபிரதா, வேளாண் பொறியியல் துறை திருமலைகுமார், வேளாண் விற்பனை துறை உதவி வேளாண்மை அலுவலர் பாலமுருகன், தோட்டக்கலைத்துறை அலுவலர் வேலன் ஆகியோர் தங்கள் துறையில் உள்ள மான்ய திட்டங்கள், தொழில் நுட்பங்கள் பற்றி எடுத்துக் கூறினர்.கருத்து காட்சி அமைத்து, மண் மாதிரி, விதை நேர்த்தி போன்ற செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன. ஆத்மா திட்ட வட்டார மேலாளர் தேவி மற்றும் வடசிறுவளூர், ராமராஜாபுரம் கிராம விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மேல்மலையனூர் பகுதி விவசாயிகள்... கவலை பாசனமின்றி கரும்பு பயிர்கள் கருகின**

செஞ்சி:மேல்மலையனூர் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் கரும்பு பயிர்கள் தண்ணீர் இன்றி கருகி வருகின்றன.கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்து போனதால் ஏரிகள் நிரம்ப வில்லை. இதனால் கிணறுகளின் தண்ணீர் மட்டம் வேகமாக குறைந்து வந்தது. கோடை துவங்கியதில் இருந்து செஞ்சி தாலுகாவில் பல கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது.கிணறுகளின் நீர்மட்டம் வெகுவாக குறைந்ததால் பயிர்களை காப்பாற்ற முடியாமல் விவசாயிகள் தடுமாறி வந்தனர்.மேல்மலையனூர் ஒன்றியம் அன்னமங்கலம் கிராமத்தில் நெல் பயிரை காப்பாற்ற

டேங்கரில் தண்ணீர் இரைத்தனர். தற்போது மேல்மலையனூர் ஒன்றியத்தில் பயிரிடப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் கரும்பு பயிர்கள் வேகமாக கருகி வருகின்றன.மேல்மலையனூர், கொடுக்கன்குப்பம், நாரணமங்கலம், மேல்வயலாமூர் உட்பட பல கிராமங்களில் கரும்பு பயிர்கள் காய்ந்து வருகின்றன.கோடை மழை குறித்த நேரத்தில் பெய்யாமல் காலம் கடந்து வருவதால் தற்போது ஓரளவிற்கு பசுமையுடன் காணப்படும் கரும்பு பயிர்களுக்கும் ஆபத்து உருவாகி உள்ளது. கடும் வெப்பத்திற்கு தாக்கு பிடிக்க முடியாமல் அடுத்த சில நாட்களில் கரும்பு பயிர்கள் முழுவதுமாக கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. இது விவசாயிகளை பெரிதும் கவலை அடைய செய்துள்ளது.

**மரவள்ளி உற்பத்தி வீழ்ச்சி ஜவ்வரிசி விலை உயர்வு**

சேலம்: சேலம் மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக, மரவள்ளிக்கிழங்கு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த, இரண்டு ஆண்டுகளாக தமிழகம் முழுவதும் மழை பொய்த்ததால், நிலத்தடி நீர்மட்டம் கீழே சென்று விட்டது. இதனால், கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது.

சேலம், நாமக்கல் மாவட்டங்களில் மலைசார்ந்த பகுதிகளில், குறைந்த அளவு தண்ணீர் தேவையுள்ள மரவள்ளிக்கிழங்கு அதிகம் பயிரிடப்படுகிறது. மரவள்ளிக்கிழங்கில் இருந்து ஸ்டார்ச், ஜவ்வரிசி உள்ளிட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கப்படுகிறது.

தமிழகத்தில் உற்பத்தியாகும் ஜவ்வரிசி, தமிழகம் மட்டுமின்றி அண்டை மாநிலங்களான கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகா உள்ளிட்ட இடங்களுக்கும் லாரி மூலமாக மாதத்திற்கு, 200 டன் வரை அனுப்பப்படுகிறது. ஜவ்வரிசி உற்பத்தி தொழில் நசிவு காரணமாக, நொடிந்து போன, 300க்கும் மேற்பட்ட ஆலைகள் இழுத்து மூடப்பட்டு விட்டன. மேலும், மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியும் வெகுவாக குறைந்து விட்டது.

இதனால், உற்பத்தி குறைந்து, இருப்பு வைக்கப்பட்டுள்ள ஜவ்வரிசி மட்டுமே விற்பனைக்கு வருவதால், கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. 90 கிலோ கொண்ட, ஒரு மூட்டை ஜவ்வரிசி விலை, 800 ரூபாயாக உயர்ந்துள்ளது.

**உழவர் பெருவிழா**

ராசிபுரம்: ராசிபுரம் அருகே மூலக்காடு கிராமத்தில், மாரியம்மன் கோவில் திடலில், உழவர் பெருவிழா நடந்தது.

வேளாண் உதவி இயக்குநர் சீனிவாசன் தலைமை வகித்தார். வேளாண் துணை இயக்குநர் லோகநாதபிரகாசம், வெண்ணந்தூர் யூனியன் சேர்மன் தமிழ்ச்செல்வி, பஞ்சாயத்து தலைவர் சீத்தாலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், வேளாண் துறை, தோட்டக்கலை துறையில் உள்ள அரசு திட்டம் குறித்து விளக்கிக் கூறப்பட்டது. மேலும், வேளாண் இடுபொருட்கள், வேளாண் தொழில்நுட்ப கையேடு ஆகியவை, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.
துணை வேளாண் அலுவலர் பசுபதி, தோட்டக்கலை உதவி இயக்குனர் தமிழ்ச்செல்வி உட்பட பலர் பங்கேற்றனர்.

**விலை சரிவால் தேயிலை விவசாயிகள் கவலை**

குன்னூர் : குன்னூர் ஏலத்தில் தொடரும் விலை சரிவால், தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையத்தில், நடப்பாண்டின் 19வது ஏலம் நடந்தது. மொத்தம் 15.40 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில், 11.19 லட்சம் கிலோ இலை ரகமும், 4.21 லட்சம் கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும்.
மொத்தம் 15.40 லட்சம் கிலோ தேயிலை தூளில் 82 சதவீதம் விற்பனையானது. இந்த வாரமும் விலையில் சரிவு காணப்பட்டது. கிலோ ஒன்றுக்கு 4 ரூபாய் விலை குறைந்தது. சி.டி.சி., ரகத்துக்கு அதிகபட்சமாக 173 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு அதிகபட்சமாக 250 ரூபாயும் விலை கிடைத்தது. சராசரியாக சாதாரண இலை ரகத்துக்கு 80 ரூபாயிலிருந்து, 82 ரூபாய் வரையிலும், உயர் ரகம் கிலோ ஒன்றுக்கு 115 ரூபாய் முதல், 150 ரூபாய் விலை கிடைத்தது.
டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 80 ரூபாயிலிருந்து, 83 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 130 ரூபாய் முதல், 160 ரூபாய் வரை விலை கிடைத்தது. வரும் 16 மற்றும் 17ம் தேதிகளில் நடக்கும் 20வது ஏலத்துக்கு மொத்தம் 14.84 லட்சம் கிலோ விற்பனைக்கு தயாராக உள்ளது.

தொடரும் விலை சரிவு:
தேயிலை ஏலத்தில் கடந்த பல வாரங்களாக தொடர்ந்து விலை சரிவு ஏற்பட்டு வருகிறது. சராசரியாக ஒரு கிலோவுக்கு 93.50 ரூபாய் விலை கிடைத்தது.
இதுவே இதுவரை நடந்த ஏலத்தில், குறைந்தபட்ச விலையாகும். கடந்த மார்ச் மாதம் வரை கிலோ ஒன்றுக்கு சராசரியாக 100
ரூபாய் கடந்த நிலையில், மார்ச் இறுதியிலிருந்து தேயிலை தூளின் விலை தொடர்ந்து சரிந்து வருகிறது.
இதன் காரணமாக பசுந்தேயிலைக்கு வழங்கப்படும் வாராந்திர விலையும் ஒரு ரூபாய் குறைந்துள்ளது. இதனால், சாதாரண பசுந்தேயிலைக்கு 15 முதல் 17 ரூபாயும், நடுத்தர ரகத்துக்கு 18-20 ரூபாயும், உயர் ரகத்துக்கு 20 முதல் 23 வரை விலை கிடைக்கிறது.

தேயிலைக்கு தொடர்ந்து விலை சரிவு ஏற்பட்டு வருவதால் உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**தேயிலை செடிகளை பாதுகாக்க "ஸ்பிரிங்லர்'**

குன்னூர்:குன்னூர் மற்றும் சுற்றுவட்டாரப்பகுதிகளில், தேயிலை செடிகள் கருகாமல் இருக்க "ஸ்பிரிங்லர்' மூலம் தண்ணீர் பாய்ச்சப்பட்டு வருகிறது.குன்னூரில் நடப்பாண்டில் எதிர்பார்த்த அளவுக்கு மழை பெய்யவில்லை. தற்போது, கோடை வெயிலின் தாக்கத்தால், தேயிலை செடிகள் முழுமையாக கருகி வருகின்றன. இதனால், தேயிலை செடிகளை பாதுக்காக்க பல்வேறு நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.கவாத்து செய்யப்பட்ட செடிகள் துளிர் விடும் வகையில், தேயிலை மீது செடிகளை கொண்டு மூடும் பணிகள் நடந்து வருகிறது.மேலும் "ஸ்பிரிங்லர்' மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். இந்த முறையால் தேயிலை செடிகளுக்கான தண்ணீர் பூர்த்தி செய்யப்படுகிறது.

**பசுந்தேயிலை வரத்து அதிகம்உற்பத்தி மேற்கொள்வதில் சிக்கல்**

மஞ்சூர்:பசுந்தேயிலை வரத்து அதிகரித்து வரும் நிலையில், தேயிலை உற்பத்தி மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் கடந்த மாதத்திலிருந்து பசுந்தேயிலை வரத்து அதிகரித்த காரணத்தால், அங்கத்தினர்களிடமிருந்து பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்படுவதில் அடிக்கடி தொய்வு ஏற்பட்டது. இதனால், அங்கத்தினர்கள் குறிப்பிட்ட நாளில் பசுந்தேயிலை பறிக்க முடியாமல் அவதியடைந்து வந்தனர். தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை கொள்முதல் அதிகரிப்பதால் தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டு, பணிகள் பாதிக்கப்படுகின்றன. இதனால், தேயிலை உற்பத்தி பிரிவில் தேயிலை தூள் உற்பத்தி செய்வதிலும் திணறல் ஏற்பட்டுள்ளது."புதியதாக பொறுப்பேற்ற இயக்குனர்கள் எவ்வித பாதிப்பு இல்லாமல் பசுந்தேயிலை கொள்முதல் செய்ய வேண்டும்' என அங்கத்தினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**உழவர்சந்தை செல்லும் அரசு பஸ்கள் நிறுத்தம்: விவசாயிகள் பாதிப்பு**

குஜிலியம்பாறை:விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகளை, திண்டுக்கல் உழவர் சந்தையில் விற்கும் விதமாக, ஏரியா வாரியாக விடப்பட்ட அரசு டவுன் பஸ்கள் நிறுத்தப்பட்டதால், விவசாயிகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். திண்டுக்கல், சின்னாளபட்டி, வத்தலக்குண்டு, கொடைக்கானல், பழனி ஆகிய இடங்களில், உழவர் சந்தைகள் உருவாக்கப்பட்டன. இதனால், விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகள், கீரைகள், பழங்கள், தேங்காய், இழை உள்ளிட்ட பொருட்களை உழவர் சந்தைக்கு கொண்டு வந்து,

நியாயமான விலையில் விற்று, லாபம் பார்த்தனர். பொது மக்களும், மிக குறைந்த விலையில், காய்கறிகளை வாங்கி பயன் பெற்றனர். இதற்காக, சின்னாளபட்டி, தருமத்துப்பட்டி, கோவிலூர், வளவிசெட்டிபட்டி, செங்குறிச்சி உள்ளிட்ட 12 இடங்களில் இருந்து, அரசு டவுன் பஸ்கள், காலையில் மட்டும் ஒரு முறை இயக்கப்பட்டன. இவற்றில், விவசாயிகள், தங்களுக்கு மட்டும் டிக்கெட் எடுத்துக்கொண்டு, தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை, இலவசமாக பஸ்களில் ஏற்றி சென்றனர். இதனால் உழவர் சந்தைகளில் குறைவான விலையில் காய்கறிகள் கிடைத்தது. இந்நிலையில், உழவர் சந்தைக்கு சென்ற அரசு டவுன் பஸ்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், விவசாயிகள் உழவர் சந்தைக்கு செல்ல முடியவில்லை. சமீப நாட்களாக காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது. பொது மக்கள், விவசாயிகளின் நலன் கருதி உழவர் சந்தைக்கு சென்ற அரசு டவுன் பஸ்களை மீண்டும் இயக்கி, உழவர் சந்தையை மேம்படுத்தவும், காய்கறிகள் குறைந்த விலையில் கிடைக்கவும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டும்.

**உழவர் பெருவிழா**

முதுகுளத்தூர்:முதுகுளத்தூர் அருகே மேற்கு கொட்டகுடியில் உழவர் பெருவிழா, விக்கிரமபாண்டியபுரம் ஊராட்சி தலைவர் சந்திரபோஸ் தலைமையிலும், வேளாண் உதவி இயக்குநர் பாலமுருகன் முன்னிலையிலும், நடந்தது. மண் மாதிரிகள் சேகரிப்பு, மேட்டுபாத்தி அமைத்து, நாற்றாங்கால் அமைப்பது குறித்து விவசாயிகளுக்கு விளக்கபட்டது. வேளாண் துணை அலுவலர் ராமகிருஷ்ணன், தோட்டக்கலை அலுவலர் பரமசிவம், உதவி பொறியாளர் கோபிநாதன், உதவி வேளாண் அலுவலர் சரவணன், ஆத்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் ராமசாமி பங்கேற்றனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

சிவகங்கை:""சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில்,மே 24ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறும். இதில், மாவட்ட அளவிலான அலுவலர்கள் பங்கேற்கின்றனர். விவசாயிகள் விவசாயம் சார்ந்த புகார்களை தெரிவிக்கலாம்," என, கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார்.

**விவசாய நிலத்தில் ரோடு விரிவாக்கப்பணி சர்வே செய்ய விவசாயிகள் வலியுறுத்தல்**

திருப்புவனம்:திருப்புவனம் நரிக்குடி ரோடு விரிவாக்கப்பணியில், பாலம் அமைப்பதற்கு தனியார் விவசாய நிலத்தில் பள்ளம் தோண்டுவதாக புகார் எழுந்துள்ளது. இதற்கு நிலத்தை "சர்வே' செய்து இடத்தை கையகப்படுத்துமாறு விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.திருப்புவனம் நரிக்குடி ரோடு அகலப்படுத்தும் பணி நடந்து வருகிறது. முதற்கட்டமாக கீழராங்கியம் விலக்கிலிருந்து

வெள்ளக்கரை வரை, மாநில நெடுஞ்சாலைத்துறையினர் அகலப்படுத்தியுள்ளனர். இதனால் ரோடு அகலமானதுடன், வாகனங்கள் இடையூறின்றி செல்கிறது. எஞ்சியுள்ள பகுதியில் ரோட்டின் இருபுறமும் குண்டும் குழியுமாக உள்ளதால், இரவில் டூவீலரில் செல்வோர் பள்ளத்தில் விழுந்து படுகாயமடைகின்றனர். இதனால், எஞ்சிய பழையூரிலிருந்து நயினார்பேட்டை வரை அகலப்படுத்தும் பணி சில நாட்களாக நடந்துவருகிறது. இதில், ரோட்டின் குறுக்கே செல்லும் சிறு பாலங்களை அகலப்படுத்தும் நோக்கில், பழைய பாலம் அருகிலேயே பள்ளம் தோண்டியுள்ளனர். இது தனியார் விவசாய நிலத்தில் தோண்டுவதாகவும், ரோட்டை ஒட்டிய வாய்க்கால் அழிக்கப்படுவதாகவும் புகார் எழுந்துள்ளது.இதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். நெடுஞ்சாலைத்துறை இடத்தை சர்வே செய்து அகலப்படுத்தவும், ரோடு விரிவாக்கப்பணிக்காக இடம் தேவைப்படும் பட்சத்தில், வழங்க தயாராக உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்ததால், பாலம் அமைக்கும் பணிக்காக பள்ளம் தோண்டும் பணியை நிறுத்திவைத்துள்ளனர். நெடுஞ்சாலைத்துறை உதவி இயக்குனர் தனசேகர் கூறுகையில், ""மாவட்டத்தில் முக்கிய சாலை என்பதால் விரிவாக்கம் செய்கிறோம். நெடுஞ்சாலைத்துறைக்கு 12 மீ., அகலத்திற்கு இடமுள்ளது. அந்த இடத்தில் தான் பணி நடக்கிறது. தனியார் இடத்தில் தோண்டவில்லை. வருவாய்த்துறையினர் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். இடத்தை "சர்வே' செய்து, எதிர்ப்பின்றி பாலம் அமைப்போம்," என்றார்.

**சிவகங்கை வாரச் சந்தையில் காய்கறி விலை கடும் உயர்வு**

சிவகங்கை:வைகாசி முகூர்த்த நாட்களாக இருப்பதால், சிவகங்கை வாரச்சந்தையில் காய்கறி விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. சிவகங்கை, வாரச்சந்தைக்கு வெளிமாவட்டங்களில் இருந்து காய்கறி வரத்துள்ளன. தற்போது, காய்கறிகளின் வரத்தும் குறைந்து விட்டது. வைகாசி முகூர்த்த நாட்களாக இருப்பதால், காய்கறிகளின் தேவை அதிகரித்துவிட்டது. வரத்து குறைவால், நேற்று சந்தையில் விலை கிடுகிடுவென உயர்ந்துவிட்டது. விலை (ரூ.ஒரு கிலோ): சின்னவெங்காயம் ரூ.60, பெரிய வெங்காயம் - 30, வெண்டை - 20, தக்காளி - 50, உருளை - 30, கேரட் - 60, அவரை - 60, முள்ளங்கி - 20, பட்டர் பீன்ஸ் - 100, பட்டாணி - 100, பீன்ஸ்- 60, டர்னிப் - 40, கத்தரி - 30, முருங்கை (5)- 10, மற்ற காய்கறிகள் பழைய விலையிலேயே இருந்தது. வியாபாரி செல்வராஜ் கூறுகையில்,""வெங்காயம், தக்காளி போன்றவை தமிழகத்தில் விளைச்சல் குறைந்து விட்டன. இதனால், பெங்களூரு தக்காளி அதிகளவில் விற்பனைக்கு வருகிறது. அதே போன்று சின்னவெங்காயம் வெளிமாநிலங்களில் இருந்து வருகிறது. மற்ற காய்கறிகளின் விளைச்சலும் குறைந்துவிட்டன. இதன் காரணமாக, விலை உயர்ந்துள்ளன. மேலும், வைகாசி முகூர்த்த

நாட்களில், காய்கறிகள் தேவை அதிகரித்துவிட்டதால், தட்டுப்பாடு காரணமாகவும் உயர்ந்துள்ளன," என்றார்.

**நெல்லையில் 24ம் தேதி விவசாயிகள் குறை கூட்டம்**

திருநெல்வேலி:நெல்லையில் 24ம் தேதி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது.
நெல்லை மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வழக்கமாக ஆங்கில பிரதி மாதம் 3வது வெள்ளிக் கிழமை நடத்தப்படும். ஆனால் தற்போது மாவட்டத்தில் அனைத்து தாலுகாக்களிலும் ஜமாபந்தி நடந்து வருவதால் அனைத்து துணை கலெக்டர்கள், மாவட்ட அலுவலர்கள், கோட்ட அலுவலர்கள், வேளாண் துறை, புள்ளியல் துறை அலுவலர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.
எனவே, இம்மாதம் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வரும் 24ம் தேதி காலை 11 மணிக்கு நடத்தப்படும் என்று கலெக்டர் சமயமூர்த்தி தெரிவித்தார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**பசுமைப்புரட்சியை ஏற்படுத்தும் வகையில், விவசாயிகளுக்கு 80 சதவீத மானியத்துடன், சூரிய சக்தியால் இயங்கும் 2,000 பம்பு செட்டுகள் ஜெயலலிதா அறிவிப்பு**

சென்னை

தமிழகத்தில் இரண்டாம் பசுமைப்புரட்சியை ஏற்படுத்தும் வகையில், விவசாயிகளுக்கு, 80 சதவீத மானியத்துடன், சூரிய சக்தியுடன் இயங்கும் 2,000 பம்பு செட்டுகள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது என்று, சட்டசபையில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார்.

சட்டசபையில்,இன்று காலையில், பேரவை தொடங்கியதும், பேரவை விதி 110–ன்கீழ் முதல்–அமைச்சர் ஜெயலலிதா ஒரு அறிக்கை தாக்கல் செய்து பேசியதாவது:–

<u>தண்ணீரை வீணாக்காமல் பயன்படுத்திட</u>

தமிழ்நாடு நீர் பற்றாக்குறை உள்ள மாநிலம் என்பதால், பாசனத்திற்கு இப்பொழுது கிடைக்கும் நீரினை வீணாக்காமல் சிக்கனமாக பயன்படுத்தி, பயிரிடும் பரப்பினை அதிகரித்து அதிக மகசூல் பெறுவது அவசியமாகும்.

இதைக்கருத்தில் கொண்டு, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் முதலான நுண்ணீர் பாசன அமைப்புகளை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியத்திலும், இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழக அரசு வழங்கி இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

<u>சூரியசக்தி பம்பு செட்டு</u>

அதிகரித்து வரும் மின்சாரத்தேவையை கருத்தில் கொண்டு, சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை மானியத்தில் வழங்கும் திட்டத்தை எனது தலைமையிலான அரசு முதன் முதலாக சென்ற ஆண்டு அறிவித்தது.

இதைச் செயல்படுத்தும் வகையில், டெல்டா மாவட்டங்களில் 500 சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை 80 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் பணிகள்

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலம் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த பம்பு செட்டுகள் விரைவில் வழங்கப்படும்.

**மானாவாரி முறையில் சாகுபடி செய்யப்பட்ட நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெறும் வழிமுறைகள் வேளாண்மைத்துறை அதிகாரி விளக்கம்**

ஈரோடு

மானாவாரி முறையில் சாகுபடி செய்யப்பட்ட நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெறும் வழிமுறைகள் குறித்து வேளாண்மைத்துறை அதிகாரி விளக்கம் அளித்து உள்ளார்.

<u>மானாவாரி சாகுபடி</u>

கோபி வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

தமிழகத்தில் 52 சதவீதம் மானாவாரி நிலமாக உள்ளது. இந்த நிலங்களில் 14 சதவீதம் எண்ணை வித்து பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. அதில் நிலக்கடலை முக்கியமான மானாவாரி பயிராக விளங்குகிறது. சுமார் 80 சதவீதத்திற்கு மேல் நிலக்கடலை பயிரையே மானாவாரி நிலங்களில் பயிர் செய்கின்றனர்.

நிலக்கடலையில் வி.ஆர்.ஐ.–2, வி.ஆர்.ஐ.–3, டி.எம்.வி.–7, கோ–1, கோ–2, ஜே.எல்.–24 ஆகிய ரகங்கள் ஏற்றவையாகும். ஒரு ஏக்கருக்கு 50 முதல் 55 கிலோ வரை நிலக்கடலை பருப்பு தேவைப்படுகிறது. மானாவாரி நிலங்களில் பயிர் எண்ணிக்கையைப் பராமரிப்பு வேண்டும். அப்போதுதான் அதிக மகசூல் பெற முடியும்.

<u>முளை கட்டி விதைத்தல்</u>

விதைகளின் முளைப்புத் திறனை அதிகரிக்கவும், பயிர்களின் எண்ணிக்கையைப் பராமரிக்கவும், விதைகளை முளை கட்டி விதைத்தல் ஒரு எளிய முறையாகும். இதனால், 95 சதவீதம் வரை பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடிகிறது. 2 கிலோ விதைக்கு 5 கிராம் கால்சியம் குளோரைடு உப்பை எடுத்து ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்துக் கொள்ளவும். ஒரு ஏக்கர் விதைக்கு 30 லிட்டர் தண்ணீரில் 150 கிராம் உப்பு கலந்து கரைசல் தயார் செய்து கொள்ள வேண்டும்.

இந்த கரைசலில் சுமார் 6 மணி நேரம் விதைகளை ஊற வைக்கவும். ஊற வைத்த விதைகளை ஈரச்சாக்கின் மீது பரப்ப வேண்டும். அதனை மற்றொரு ஈரச்சாக்குக் கொண்டு 24 மணி நேரம் மூடி

வைக்க வேண்டும். பிறகு விதையில் கருமுளை வெளி வந்து இருக்கும். இவ்வாறு முளை கண்ட விதைகளை பிரித்தெடுத்து நிழலில் உலர்த்த வேண்டும்.

விதை நேர்த்தி

முளை கட்டிய விதைகளை நிழலில் நன்கு உலர்த்தி விதை நேர்த்தி செய்து விதைப்புக்கு பயன்படுத்தலாம். பூசணக்கொல்லி விதை நேர்த்தி, பூஞ்சாணக் விதை நேர்த்தி, நுண்ணுயிர் விதை நேர்த்தி ஆகிய முறைகளில் விதைகளை நேர்த்தி செய்து விதைக்கலாம். பெரும்பாலும் மானாவாரி நிலங்களில் உரமிடுதல் என்பது மிகவும் குறைவு. ஆனால் மானாவாரி முறையில் சாகுபடி செய்யப்படும் பயிர்களில் மகசூல் அதிகரிக்க உரமிடுதல் அவசியம் ஆகும். குறிப்பாக நிலக்கடலையில் மேலுரம் இடுவதை தவிர்த்து விட்டு அடியுரமாகவே உரமிட வேண்டும். மானாவாரி நிலத்திற்கு ஊட்டமேற்றி தொழு உரம் இடுதல் மிகவும் சிறப்பாகும்.

உரமிடுதல்

விதைப்பதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு ஏக்கருக்கு ஒரு வண்டி மட்கிய குப்பையுடன் 25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை நன்கு கலந்து காற்றுப் புகாமல் களிமண் மூலம் மூடிவிட வேண்டும். விதைக்கும் போது இந்தக் குப்பை மற்றும் உரங்களுடன் யூரியா 9 கிலோவைச் சேர்த்து நன்கு கலக்க வேண்டும்.

இவற்றை கடலைப் பருப்பு சால் விடும்போது, அந்த படைக்காலில் தூவ வேண்டும். டிராக்டர் மூலம் பருப்பு விதைத்தால் கடைசி உழவின்போது ஊட்டமேற்றிய தொழு உரத்தை இட்டு விடலாம்.

ஜிப்சம் இடுதல்

நிலக்கடலை உற்பத்தியை அதிகரிக்க பயிருக்கு ஜிப்சம் இடுதல் மிகவும் அவசியம். ஜிப்சத்தில் 23 சதவீதம் சுண்ணாம்புச் சத்தும், 18 சதவீதம் கந்தகச் சத்தும் அடங்கி உள்ளது. இதில், சுண்ணாம்புச் சத்தானது காய்கள் திரட்சியாகவும், அதிக எடை உடையதாக உருவாகவும் வழி செய்கிறது. கந்தகச் சத்து நிலக்கடலையில் எண்ணைச் சத்தை அதிகரிக்கிறது.

ஒரு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சத்தை அடியுரமாகவே இட வேண்டும். அதன்பின்பு விதைத்த 40–45–வது நாளில் பூப்பிடிக்கும் தருணத்தில் மீண்டும் ஒரு முறை 80 கிலோ ஜிப்சத்தை இட்டு மண் அணைக்க வேண்டும்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கோபி வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறியுள்ளார்

**வறட்சியின் பிடியில் இருந்து தேயிலை செடிகளை காப்பாற்ற நவீன முறையில் நீர் பாசனம் குன்னூர் விவசாயிகள் அசத்தல்**

குன்னூர்,

தேயிலை செடிகளை வறட்சியின் பிடியில் இருந்து காப்பாற்றும் வகையில் நவீன நீர் பாசன முறையை குன்னூர் விவ சாயிகள் கையாண்டு வரு கிறார்கள்.

தேயிலை விவசாயம்

நீலகிரி மாவட்டத்தின் முக் கிய விவசாய தொழிலாக தேயிலை விவசாயம் உள்ளது. மாவட்டத்தின் சிறு விவசாயி கள் மற்றும் கம்பெனி தேயிலை எஸ்டேட்டுகள் தேயிலை விவ சாயத்தில் ஈடுபட்டு வருகின் றன. கம்பெனி தேயிலை எஸ் டேட்டுகள் ஆங்கிலேயர்கள் ஆட்சி காலத்தில் இருந்தே இயங்கி வருகிறது.

இந்த எஸ்டேட்டுகளில் உள்ள தேயிலை செடிகள் முறையாக பராமரித்து உயர் ரக பச்சை தேயிலை அறுவடை செய்யப்பட்டு வருகிறது.இதன் மூலம் கம்பெனி தேயிலை எஸ்டேட்டுகள் ஏற்றுமதி தரம் வாய்ந்த முதல் ரக தேயிலை தூளை தங்களுடைய தொழிற் சாலைகள் மூலம் உற்பத்தி செய்து வருகின்றனர்.

வி.டி.நாற்றுக்கள்

கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு உபாசி மூலம் புதிய தொழில் நுட்ப முறையில் தேயிலை நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்த நாற் றுக்கள் உயர் ரக விளைச்சலை கொடுத்து வருகிறது. இதன் மூலம் பழைய கொட்டைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை நாற்றுக்கள் அகற் றப்பட்டு புதிய தொழில் நுட் பத்தின் மூலம் உற்பத்தி செய் யப்பட்ட வி.டி. நாற்றுக்கள் நடவு செய்யப்பட்டு வருகின் றன.

இந்த நாற்றுக்கள் கம்பெனி தேயிலை

எஸ்டேட்டுகளிலும், சிறு விவசாயிகளின் தோட்டங் களிலும் அதிகளவில் நடவு செய்யப்பட்டு வருகிறது. குன் னூர் பகுதியில் உள்ள கம்பெனி தேயிலை எஸ்டேட்டுகளில் தற்போது காலியாக

உள்ள விளை நிலங்களிலும் புதிய நாற்றுக்கள் நடவு செய்யப் பட்டு வருகின்றன. மேலும், தேயிலை செடிகளும் கவாத்து செய்யப்பட்டு வருகிறது.

நீர் பாசன முறை

இந்த நிலையில் குன்னூர் பகுதியில் சரியான மழை இல்லாததால் கடுமையான வெயில் நிலவி வருகிறது. இதையடுத்து புதியதாக நடவு செய்யப்பட்ட தேயிலை செடி களை வறட்சியின் பிடியில் இருந்து காப்பாற்றும் வகையில் நீர்பாசன முறை கையாளப் பட்டு வருகிறது. தாகை எனப் படும் களை செடிகளை கொண்டு கூடாரம் அமைத்து அதன் மீது விவசாயிகள் தண்ணீரை ஊற்றி வருகிறார்கள்.

இதன் மூலம் தாகை செடி களில் இருந்து விழும் தண்ணீர் சொட்டு நீர் பாசனம் முறை யில் தேயிலை செடிகளுக்கு விழுகிறது. இதன் காரணமாக தேயிலை செடிகள் வறட்சியில் இருந்து காப்பாற்றப்பட்டு வருகின்றன.

**நாகையில் நன்னீர் மீன்வளர்ப்பு தொழில் நுட்ப பயிற்சி பல்கலைக்கழக துணைவேந்தர் தொடங்கி வைத்தார்**

நாகப்பட்டினம்,

நாகை மீன்வள தொழில்நுட்ப நிலையத்தில் நடைபெற்ற நன்னீர் மீன்வளர்ப்பு தொழில்நுட்ப பயிற்சி முகாமை தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக துணை வேந்தர் பாஸ்கரன் தொடங்கி வைத்தார்.

நன்னீர் மீன்வளர்ப்பு

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்தின் கீழ் நாகையில் இயங்கி வரும் மீன்வள தொழில்நுட்ப நிலையத்தில் நன்னீர் மீன்வளர்ப்பு தொழில் நுட்ப பயிற்சி முகாம் தொடங்கியது. நிகழ்ச்சிக்கு பல்கலைக்கழக துணை வேந்தர் பாஸ்கரன் தலைமை தாங்கி, பயிற்சியை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

மீன் பண்ணையாளர்கள் நன்னீர் மீன்வளர்ப்பு தொழில் நுட்ப பயிற்சியினை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொண்டு தங்களது பண்ணையில் மீன் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். மேலும் மீன்வளம் சம்பந்தமான அனைத்து பிரச்சினைகளையும் பல்கலை கழகத்தில் பணிபுரியும் பேராசிரியர்களிடம் தெரிவித்து அதற்கான அறிவுரைகளை பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

பயிற்சியில் நன்னீர் மீன்வளர்ப்பு, மீன் குஞ்சு உற்பத்தி, சினை மீன் பராமரிப்பு, நன்னீர் இறால் வளர்ப்பு, நன்னீர் மீன் குளங்கள் பராமரிப்பு உள் ளிட்ட பல்வேறு மீன் வளர்ப்பு முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

செயல்விளக்கம்

மேலும் இதில் பயிற்சி பெறுபவர்களை மீன் வளர்ப்பு பண்ணைகளுக்கு நேரில் அழைத் துச் சென்று பண்ணைகளில் நடைபெறும் மீன்வளர்ப்பு முறைகள் குறித்து செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்படுகிறது. நிகழ்ச்சியில் நன்னீர் மீன் வளர்ப்பு குறித்த பயிற்சி கையேட்டினை துணை வேந்தர் வெளியிட பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க இயக்குனர் வெங்கடசாமி பெற்றுக்கொண்டார். முகாமில் புதுச்சேரி, தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக நாகை மீன்வள தொழில்நுட்ப நிலைய இயக்குனர் நாகூர்மீரான் வரவேற்றார். முடிவில் உதவி பேராசிரியர் சந்தோஷ்குமார் நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி பேராசிரியர் ஆனந்த் செய்திருந்தார்.

**புதுவை செஞ்சிசாலையில் மீன்–காய்கறி மார்க்கெட் முதல்–அமைச்சர் ரங்கசாமி திறந்துவைத்தார்**

புதுச்சேரி

புதுவை செஞ்சி சாலையில் மீன் மற்றும் காய்கறி மார்க்கெட்டை முதல்–அமைச்சர் ரங்கசாமி திறந்துவைத்தார்.

<u>மீன்–காய்கறி மார்க்கெட்</u>

புதுவை செஞ்சி சாலையில் சாலையோரமாக மார்க்கெட் வசதியின்றி மீன் மற்றும் காய்கறி வியாபாரம் செய்து வருபவர்களின் துயர்துடைக்கும் பொருட்டு புதுவை திட்ட அமலாக்க முகமையின் மூலம் சுனாமி நிவாரண நிதியின் கீழ் ரூ.89லட்சத்து 34ஆயிரம் மதிப்பில் புதிய மார்க்கெட் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

பிரெஞ்சு இந்திய பாரம்பரிய கலாச்சார அடிப்படையில் வடிவமைக்கப்பட்டு 5ஆயிரத்து 84சதுர அடி ரப்பில் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் 82மீன் வியாபாரம் செய்பவர்களும், 35காய்கறி வியாபாரம் செய்பவர்களும் பயனடைவார்கள்.

<u>பெத்தாங் விளையாட...</u>

இந்த மார்க்கெட் மூலம் சுற்று பகுதிகளிலுள்ள சுமார் 20ஆயிரம் மக்களும் பயனடைவார்கள். மேலும் சிறப்பு அம்சமாக பிரெஞ்சு பாரம்பரிய விளையாட்டான பெத்தாங் விளையாடவும் தனியாக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மார்க்கெட் திறப்பு விழா நேற்று நடந்தது. விழாவுக்கு அமைச்சர் பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். திட்ட இயக்குனர் சுந்தரவடிவேலு வரவேற்று பேசினார்.

ரங்கசாமி

விழாவில் முதல்–அமைச்சர் ரங்கசாமி கலந்துகொண்டு மார்க்கெட்டை திறந்துவைத்தார். நிகழ்ச்சியில் உள்ளாட்சித்துறை இயக்குனர் ரவிப்பிரகாஷ், இணை திட்ட இயக்குனர் சுமிதா, நகராட்சி ஆணையர் ராஜமாணிக்கம், செயற்பொறியாளர் சிவபாலன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**கச்சிராயப்பாளையம் அருகே தண்ணீர் இன்றி வறண்ட கோமுகி அணை**

கச்சிராயப்பாளையம்,

கச்சிராயப்பாளையம் அருகே தண்ணீர் இன்றி கோமுகி அணை வறண்டு காட்சி அளிக்கிறது.

கோமுகி அணை

விழுப்புரம் மாவட்டம் கச்சிராயப்பாளையம் அருகே கல்வராயன்மலை அடிவாரத் தில் கோமுகி அணை உள்ளது. 46 அடி உயரம் கொண்ட இந்த அணையின் புதிய பாசனம், பழைய பாசனம் மூலம் கச்சிராயப்பாளையம், வடக்கனந்தல், மாத்தூர், மண்மலை, கரடிசித்தூர், பால்ராம்பட்டு, தாவடிப்பட்டு, செம்படாக்குறிச்சி, மட்டிகைக் குறிச்சி, சடையம்பட்டு, சோமண்டார்குடி உள்பட பல்வேறு கிராமங்களில் உள்ள 10 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான விவசாய நிலம் ஆண்டுதோறும் பாசன வசதி பெறுகிறது.

நீரின்றி வறண்டது

கடந்த ஆண்டு பருவமழை சரியாக பெய்யாததால் அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டவில்லை. இருப்பினும் அக்டோபர் மாதம் விவசாய பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதையடுத்து அணை பகுதியில் மழை பெய்யாததால் நீர்மட்டம் வேகமாக குறைந்து, பாசனத்துக்கு தண்ணீர் வழங்க முடியவில்லை. இத னால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

தொடர்ந்து 3 மாதங்களாக மழை பெய்யாததால் கோமுகி அணை வறண்டு காட்சி அளிக்கிறது. அணையின் உட்பகுதியில் படிந்துள்ள மண், வெயிலின் தாக்கத்தால் வெடிப்பு விழுந்துள்ளது. அணையில் வறட்சியை போக்க கோடை மழை பெய்ய வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர்.

**திண்டிவனம் அருகே நீர்வள, நிலவள திட்டத்தை உலக வங்கி குழுவினர் ஆய்வு**

திண்டிவனம்,

திண்டிவனம் அருகே நீர்வள, நிலவள திட்டத்தை உலக வங்கி குழு வினர் ஆய்வு செய்தனர்.

ஆய்வு

திண்டிவனம் அருகே ஒலக்கூர் ஒன்றியத்தில் நீர்வள நிலவளத்திட்டத்தை செயல்படுத்தி வரும் திண்டி வனம் எண்ணை வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தின் திட்டப்பணிகளை பார்வை யிட்டு ஆய்வு செய்வதற்காக உழவியல் நிபுணர் பால்சித்து தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் திண்டி வனத்திற்கு வந்தனர்.

நொளம்பூர் கிராமத்தில் துல்லிய பண்ணை திட்டத்தில் நிலப்போர்வையுடன் கூடிய ஐஸ்பாக்ஸ் தர்பூசணி சாகுபடி முறை, பந்தல் காய்கறிகளான கோவக்காய், புடலங்காய் மற்றும் வெண்டை பயிர்கள், நீர்வள நிலவள திட்டத்தை செயல்படுத்திவரும் வேளாண்மை பொறியியல் துறை மூலம் கரும்பில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி மற்றும் வேளாண்மை துறையின் மூலம் துல்லிய பண்ணை திட்டத்தில் காய்கறி பயிர் சாகுபடி, நல்லாவூர் உபவடி பகுதியில் நீர்வள நிலவள திட்டத்தை செயல்படுத்தி வரும் திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் துல்லிய பண்ணையத் திட்டத் தின் கீழ் கிரிணி பழம் சாகுபடி, மக்காச்சோளம் சாகுபடி ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

விளக்கம்

அவர்களுக்கு தோட்டக் கலைத்துறை இணை இயக் குனர் துரை, வேளாண் பொறியியல் துறை அதிகாரி கள் மணி, ராமகிருஷ்ணன், ஹரிபூபதி, வேளாண்துறை துணை இயக்குனர் ராஜேந் திரன், திட்ட விஞ்ஞானிகள் அன்புமணி, பிரபு ஆகியோர் விளக்கமளித்தனர்.

**கடும் வறட்சி எதிரொலி அத்தியூர் சந்தையில் ஆட்டுக்குட்டிகள் விற்பனை**

ரிஷிவந்தியம்

கடும் வறட்சியின் எதிரொலியாக அத்தி யூர் சந்தையில் 3 ஆட்டுக் குட்டிகள் ரூ.10 ஆயிரத்துக்கு விற் பனையானது.

**மேய்ச்சல் நிலங்கள் காய்ந்தது**

விழுப்புரம் மாவட்டம் ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் கடந்த பல மாதங்களாக மழை பெய்யவில்லை. இதன் காரணமாக ஏரி, குளம், கிணறு போன்ற நீர்நிலைகள் நீர் மட்டம் குறைந்து விவசாய நிலங்கள் வறண்டு கிடக் கிறது.

ஆடு, மாடு போன்ற கால்நடை வளர்ப்பவர்கள், மேய்ச்சல் நிலம் இன்றி சிரமப்படுகின்றனர். மேலும் வைக்கோல், புல் போன்ற தீவனத்தின் விலையும் உயர்ந்துள்ளதால் கால் நடைகளை தொடர்ந்து வளர்க்க முடியாத நிலைக்கு மக்கள் ஆளாகியுள்ளனர்.

**ஆட்டுக்குட்டிகள் விற்பனை**

20, 30 ஆடுகளை வைத்திருப்பவர்கள், அதற்கு தீனி கொடுக்க தினமும் பல கிலோ மீட்டர் மேய்ச்சலுக்காக செல்கின்றனர். அப்படி யிருந்தும் சரியான உணவு கிடைப்பதில்லை. எனவே குட்டிகளை வளர்க்க முடி யாமல் விற்று வருகின்றனர்.

நேற்று நடைபெற்ற அத்தியூர் சந்தைக்கு சுற்றுப்புற கிராமங்களில் இருந்து ஆயிரத்துக்கும் அதிகமான வெள்ளாடு குட்டிகள் விற்பனைக்கு வந்தது. இதில் குறிப்பிட்ட சில ஆடுகளை தமிழக அரசின் இலவச திட்டத்துக்கு கால்நடை மருத்துவர்கள் வாங்கினர்.

**3 ஆடுகள் ரூ.10 ஆயிரம்**

பிற ஆடுகளை இறைச்சி கடைக்காரர்கள், கால்நடை வளர்ப்பவர்கள் வாங்கினர். 3 ஆட்டுக்குட்டிகள் ரூ.10 ஆயிரத் துக்கு விற்பனை யானது. ரிஷிவந்தியம் பகுதியில் தொடரும் வறட்சி யால் ஆடு வளர்ப்பவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர்.

**வடகாடு பகுதியில் மும்முனை மின்சார விநியோக நேரம் அதிகரிப்பு தொடர்ந்து வழங்க விவசாயிகள் கோரிக்கை**

வடகாடு,

வடகாடு பகுதியில் கோடை காலத்தில் மும்முனை மின்சாரம் விநியோகிக்கும் நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே தொடர்ந்து மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பயிர்கள் கருகும் நிலை

புதுக்கோட்டை மாவட்டத்தில் வடகாடு மற்றும் சுற்றுவட்டார பகுதியில் அதிக அளவில் ஆழ்குழாய் கிணறுகளை கொண்டு பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் மும்முனை மின்சா ரம் விநியோகிக்கப்பட்ட இப்பகுதி க்கு, கடந்த சில ஆண்டுகளாக மின்விநியோகம் 3 மணி நேரமாக குறைக்கப் பட்டுள்ளது.பல இடங்களில் ஒவ்வொரு மின் மாற்றியில் இருந்தும் சுழற்சி முறையில் ஒருநாள் விட்டு ஒருநாள் மின்சாரம் விநியோகிக்கப் படு வதால் சராசரியாக நாளொன் றுக்கு 1 மணி 30 நிமிட நேரமே மோட்டார்கள் இயக்கப் பட்டன. இதனால் முற்றிலும் விவசாயம் பாதிக்கப்பட்டு, விவசாயத்தையே விவசாயிகள் வெறுக்கும் நிலைக்கு மாறியுள்ளனர்.

மின்விநியோக நேரம் அதிகரிப்பு

இந்த நிலையில் தற்போது கடும் வெயிலான சூழலில் கடந்த 2 நாளாக மும்முனை மின்சாரம் நாளொன்றுக்கு 6 முதல் 8 மணி நேரம் விநி யோகிக்கப்படுகிறது. இதற்காக விவசாயிகள் தமிழக அரசை பாராட்டுகின்றனர். இவ்வாறு விநியோகிக்கப் படுவதால் தண்ணீரின்றி வாடிய தென்னை, பலா உள்ளிட்ட மரங்களுக்கும், கருகும் கரும்பு உள்ளிட்ட பயிர்களுக்கும் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது.

விவசாயிகள் கோரிக்கை

இருப்பினும், இவ்வாறு மின்விநியோகம் நேரம் அதிகரித்திருப்பது தொட ருமா? அல்லது தற்காலிக மானதுதானா என்பது குறித்து விவசாயிகளிடையே குழப்பமாக உள்ளது. எனவே, மின் விநியோகம் அதிகரித்துள்ள இந்த நிலை நீடிக்கும் என்று மின்வாரிய அதிகாரிகள் உறுதி அளித்தால் தரிசு நிலங்களில் பயிர் சாகு படி மேற்கொள்வதற்கு உதவி யாக இருக்கும் என்று விவசாயி கள் கூறுகின்றனர். மேலும் மும்முனை மின்சார விநியோக நேரத்தை அதிகரித்துள்ளதை தொடர வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**திருமயம் ஒன்றியம் ஏனப்பட்டியில் விவசாயிகளுக்கு மானியத்தில் நீர்மூழ்கி மோட்டார்கள்**

திருமயம்,

திருமயம் ஒன்றியம் ஏனப்பட்டியில் நடந்த உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு மானிய விலையில் நீர்மூழ்கி மோட்டார்கள் வழங்கப் பட்டன.

உழவர் பெருவிழா

திருமயம் ஒன்றியம் ஏனப் பட்டி கிராமத்தில் உழவர் பெருவிழா நடை பெற்றது. விழாவிற்கு வட்டார வேளா ண்மை துறை உதவி இயக்குனர் ராமமூர்த்தி தலைமை தாங்கினார். வேளாண்மை அலுவலர் மகேஸ்வரி, துணை வேளாண்மை அலுவலர் செல்லப்பா ஆகியோர் பேசி னர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஆனந்தஜோதி, வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறை உதவி வேளாண்மை அலுவலர் சுப்பிரமணி ஆகியோர் திட்டங்கள் பற்றி செயல் விளக்கம் செய்து காட்டினர்.

நீர்மூழ்கி மோட்டார்கள்

தோட்டக்கலை துணை அலுவலர் நாரயணசாமி, குழிதட்டு நாற்றங்கால் முறையை பயன்படுத்தி அதிக மகசூல் பெறுமாறு விவசாயி களுக்கு வேண்டுகோள் விடுத் தார். உதவி விதை அலுவலர் சுப்பிரமணியன் பேசினார். நிகழ்ச்சியில் ரூ.25 ஆயிரம் மதிப்பிலான நீர்மூழ்கி மோட்டார்கள் மற்றம் இடு பொருட்களும் மானிய விலை யில் வழங்கப்பட்டன.

மண்மாதிரி சேகரிப்பு

வேளாண்மை உதவி அலுவலர்கள் அண்ணா மலை, திருகுமரன், விஜய குமார், ராதா ஆகியோர் பண்ணை குட்டைகள் அமைத்தல் மற்றும் மண் மாதிரி சேகரிப்பின் முக் கியத்துவத்தை எடுத்து கூறி விண்ணப்பங்களை சேகரித்தனர். விழாவிற்கான ஏற்பாடு களை உதவி விதை அலுவலர் ராஜ்குமார், தோட்டக் கலை உதவி அலுவலர்கள் கண்ணப்பன், ராஜேஸ்கண்ணா, தமிழ்செல்வன் ஆகியோர் செய்து இருந்தனர்.

**அரவக்குறிச்சி பகுதியில் விதை மஞ்சள் விலை வீழ்ச்சி பயிரிட விவசாயிகள் தயக்கம்**

அரவக்குறிச்சி

அரவக்குறிச்சி பகுதியில் விதை மஞ்சள் விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது. இருந்த போதிலும் மஞ்சளை வாங்கி விவசாயம் செய்ய விவசாயிகள் தயங்குகிறார்கள்.

**மஞ்சள் பயிர்**

அரவக்குறிச்சி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதி பொதுமக்கள் பெரும்பாலும் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். அமராவதி ஆற்றுப்பாசனம் உள்ள பகுதிகளான ராஜபுரம், சீரங்ககவுண்டனூர், நம்பா கவுண்டனூர், தொக்குப் பட்டிபுதூர், சின்னம நாயக்கனூர் உள்ளிட்ட கிராமங்கள் மஞ்சள் மற்றும் வாழை பயிரிடுகின்றனர்.

ஆனி மற்றும் ஆடி பட்டத்தில் மஞ்சள் நடவு செய்வர். ஒரு ஏக்கருக்கு 1 டன் விதை மஞ்சள் தேவைப் படுகிறது. பயிர் செய்த 10 மாதங்களில் மகசூல் வந்து விடும். ஒரு ஏக்கர் நிலத்தில் சுமார் 8 டன் முதல் 14 டன் வரை மகசூல் கிடைக்கும். 5 கிலோ பச்சை மஞ்சள் வேகவைத்தால் ஒரு கிலோ அல்லது 1½ கிலோ கிடைக்கும். கடந்த ஆண்டு வேகவைத்த மஞ்சள் கிலோ ரூ 35 முதல் 40 வரை விற்பனையானது. வேகவைக்கப்படாத விதை மஞ்சள் கிலோ ரூ 25 முதல் ரூ.30 வரை விற்பனை ஆனது.

**விலை வீழ்ச்சி**

மழை இல்லாததால் விவசாயிகள் மஞ்சள் பயிரிட தயங்குகின்றனர். இதனால் விதை மஞ்சள் விலை குறைந்து ஒரு கிலோ ரூ. 18 முதல் ரூ. 22 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து மஞ்சள் வியாபாரிகள் கூறிய தாவது:

அரவக்குறிச்சி பகுதியில் மஞ்சள் அதிகம் பயிரிடு கின்றனர். இங்கு விளையும் மஞ்சள் தமிழகத்தில் மஞ்சள் மார்க்கெட்டான ஈரோட்டிற்கும், மகாராஷ்ட்ரா, கர்நாடகா, ஆந்திரா, கேரளா, அஸ்ஸாம், குஜராத் ஆகிய வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றது. இந்த ஆண்டு மழை பொய்த்து விட்டதால் மஞ்சள் பயிரிட பெரும்பாலான விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் மஞ்சள் இந்த ஆண்டு விரை மஞ்சள் விலை குறைந்து உள்ளது என்றனர்.

**விவசாயிகள் தயக்கம்**

இது பற்றி அந்த பகுதி விவசாயிகள் கூறும்போது, மஞ்சள் பயிரிட போதிய தண்ணீர் இல்லை. மஞ்சள் பயிரிட கூலி வேலைக்கு வரும் ஆண் ஒருவருக்கு ரூ.250ம், பெண் ஒருவருக்கு ரூ.150ம் வழங்க வேண்டி உள்ளது. கஷ்டப்பட்டு மஞ்சள் விளைய வைத்தால் மகசூல் வரும் போது விலை கூடுதலாக இருந்தால் விவசாயிக்கு மகிழ்ச்சியாக தரும்.

அதேபோல் விலை மிகவும் குறைந்து விட்டால் பெரும் நஷ்டத்திற்கு ஆளாக வேண்டியது உள்ளது எனவே மஞ்சள் பயிரிட்டு நஷ்டப் படுவதைவிட அதை மகசூல் செய்யாமல் இருப்பதே மேல் என்றனர்.

**விருப்பாட்சியில் அம்மா திட்ட முகாம்: 9 பேருக்கு வறட்சி நிவாரண தொகை கலெக்டர் வெங்கடாசலம் வழங்கினார்**

திண்டுக்கல்

விருப்பாட்சியில் நடந்த அம்மா திட்ட முகாமில் கலெக்டர் வெங்கடாசலம் 9 பேருக்கு வறட்சி நிவாரண தொகை வழங்கினார்.

அம்மா திட்ட முகாம்

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தாலுகா விருப்பாட்சியில் அம்மா திட்டத்தின் கீழ் சிறப்பு முகாம் நடந்தது. கலெக்டர் வெங்கடாசலம் தலைமை தாங்கி பொதுமக்களிடம் மனுக்களை வாங்கினார். மொத்தம் 121 மனுக்கள் பெறப்பட்டன.

இதில் நிலஅளவை உதவி இயக்குனர் பொன்ராஜ், தாசில்தார் விஜயலட்சுமி, ஒட்டன்சத்திரம் ஆணையர் ஜோதிகுமார், மாவட்ட அலுவலக மேலாளர் தெய்வேந்திரன், ஊராட்சி தலைவர் சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

முகாமில் கலெக்டர் வெங்கடாசலம் 9 பேருக்கு வறட்சி நிவாரண தொகை, நலத்திட்ட உதவிகளை வழங்கி, பேசியதாவது:–

தமிழக முதல்–அமைச்சர் மக்களை தேடி வருவாய்த்துறை எனும் உன்னத திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 358 வருவாய் கிராமங்களில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அம்மா திட்ட முகாம்கள் நடக்கிறது. வருவாய்த்துறையினர் நேரடியாக கிராமத்திற்கு சென்று பொதுமக்களிடம் மனுக்களை பெற்று, அன்றைய தினமே மனுக்களுக்கு தீர்வு காண்கின்றனர்.

121 மனுக்கள்

விருப்பாட்சி முகாமில் 121 மனுக்கள் பெறப்பட்டன. முதியோர் உதவித்தொகை, உழவர்பாதுகாப்பு திட்டத்தில் பல்வேறு உதவிகள், சலவை பெட்டி, வறட்சி நிவாரண உதவித்தொகை, குடும்ப அட்டை, சாதிச்சான்றிதழ் ஆகியவை குறித்து மனுக்கள் வந்தன.

அம்மா திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் உடனடியாக கணினியில் பதிவு செய்யப்பட்டு உடனுக்குடன் அந்தந்த துறை அலுவலர்களால் பரிசீலிக்கப்பட்டு, தகுதியான நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி இந்த முகாமில் 9 பேருக்கு வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் வறட்சி நிவாரண உதவித்தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கான ரசீதுகள் வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் கால விரயத்தை போக்கும் வகையில் உருவாக்கப்பட்ட அம்மா திட்ட முகாமின் செயல்பாடுகளை அறிந்து, பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் வெங்கடாசலம் பேசினார்.

**கல்லல், பாகனேரி பகுதியில் மாம்பழம் விளைச்சல் குறைவு விவசாயிகள் கவலை**

பாகனேரி

பாகனேரி, மற்றும் கல்லல் பகுதியில் மாம் பழம் விளைச்சல் குறைந் ததால் விவசாயி கள் மிகவும் கவலையடைந் துள் ளனர்.

**மாந்தோப்பு**

பாகனேரி, துரும்புப்பட்டி, சொக்கநாதபுரம், சிலந்தகுடி, மதகுபட்டி, அலவாக் கோட்டை, ஒக்கூர், பிரவலூர், நெற் புகப்பட்டி, கூமாச்சிப் பட்டி, முத்துப்பட்டி, ஆகிய கிராமங்கள் உள்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவ சாயிகள் மாந்தோட்டம் அமைத்துள்ளனர்.

அதில் உயர்ரகம், ஒட்டு ரகங்களான பங்கஜனவள்ளி, ருமேனியா, கிரேப், சேலம்சப் பட்டை, காசாலட்டு, மல் கோவா, போன்றவைகளை பயி ரிட்டிருந்தனர். அதன் மூலம் அவர்களுக்கு கடந்த ஆண்டுகளில் நல்ல விளைச்சல் கொடுத்து அதிக லாபம் அடைந்தனர்.

**விளைச்சல் குறைவு**

இந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததாலும், போதிய தண்ணீர் இல்லாததாலும் மாமரங்கள் குறைவான பூக் களே பூத்தது. விளைவு விளைச் சல் இன்றி போனது. சில மாந் தோட்டங்களில் விவசாயிகள் மாமரங்களுக்கு கிணற்று தண் ணீரை பாய்ச்சி விளைய வைக்க முயற்சி மேற்கொண்ட னர்.

பலன் சில மரங்கள் காய் த்தன. சில மரங்கள் காய்த்தும் அடிக்கும் வெயிலை தாங்க முடியாமல் பிஞ்சிலே வெம்பி கொட்டின. இதனால் மாந் தோட்ட விவசாயிகள் இந்த வருடம் பெரும் நஷ்டத்தையே அடைந்தனர். ஆகையால் பாகனேரி, கல்லல் பகுதி மாந்தோட்ட விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**ராஜபாளையத்தில் தமிழ்நாடு விவசாய சங்கம் ஆர்ப்பாட்டம் வறட்சி நிவாரண உதவித்தொகை வழங்க கோரிக்கை**

ராஜபாளையம்,

வறட்சி நிவாரண உதவித்தொகை வழங்க கோரி ராஜபாளையத்தில் தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

வறட்சி நிவாரணம்

தமிழகத்தில் மழை சரியாக பெய்யாத நிலையில் விவசாயிகள் பலர் பாதிக்கப்பட்டனர். நிலத்தில் பயிர் செய்திருந்த நெல், கரும்பு உள்பட பல பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச வழியின்றி தவித்தனர். இதனால் அந்த பயிர்கள் கருகின. பயிர்களை காப்பாற்ற முடியாமல் போனதால் விவசாயிகள் பலர் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டனர். இதனால் தங்களுக்கு நிவாரண உதவித்தொகை வழங்க வேண்டும் என அரசிடம் கோரினர். இதைதொடர்ந்து அரசு அவர்களுக்கு நிவாரண தொகை வழங்குவதாக அறிவித்தது. இதன்படி பல மாவட்டங்களில் விவசாயி களுக்கு நிவாரண தொகை வழங்க்பட்டதாக தெரிகிறது.

ஆனால் விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே உள்ள அய்யனாபுரம், சங்கம்பட்டி, சட்டிக்கிணறு கிராமங்களில் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் நெல், மக்காசோளம் போன்ற பல்வேறு பயிர்களை பயிரிட்டு இருந்தனர்.ஆனால் கடும் வறட்சி காரணமாக அவைகள் தண்ணீரின்றி பட்டுப் போனதால் விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்தித்தனர். ஆனால் இவர்களுக்கு அரசின் நிவாரண தொகை கிடைக்க வில்லை என கூறப்படுகிறது.

ஆர்ப்பாட்டம்

இந்த பகுதியில் பாதிக்கப் பட்ட விவசாயிகளின் பெயர்கள் நிவாரணதொகை பெறுபவர்களின் பட்டியலில் இடம்பெற வில்லை. இதனால் விடுப்பட்ட இந்த பகுதி விவசாயிகளுக்கும் நிவாரண உதவித்தொகை வழங்க தமிழக அரசும், மாவட்ட நிர்வாகமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என

வலியுறுத்தி தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பில் ராஜபாளையம் தாலுகா அலுவலகம் முன்பு ஆர்ப் பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்துக்கு முருகன், அம்மமுத்து தலைமை தாங்கினர். மாவட்ட தலைவர் குருசாமி முன்னிலை வகித்தார். இதில் மாவட்ட துணைத்தலைவர் நீராத்திலிங்கம், மாவட்ட குழு உறுப்பினர் மாரிமுத்து, ஒன்றிய துணை செயலாளர் ராமசாமி, சுப்பிரமணி மற்றும் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் உள்பட பலர் கலந்து கொண்டு கோரிக் கைகளை வலியுறுத்திகோஷம் எழுப்பினர்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண தொகை வழங்கும் பணி தொடங்கியது கலெக்டர் ஆஷிஷ்குமார் தகவல்**

தூத்துக்குடி

“தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண தொகை வழங்கும் பணி தொடங்கியது” என்று மாவட்ட கலெக்டர் ஆஷிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

<u>வறட்சி நிவாரணம்</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசால் நிவாரணத் தொகை அறிவிக்கப்பட்டு உள்ளது. அதன்படி நிவாரணத் தொகை பெறும் விவசாயிகளின் பட்டியல் தாலுகா அலுவலகம், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் மற்றும் சம்பந்தப்பட்ட வங்கிகளில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு உள்ளது.

நிவாரணத் தொகை வழங்கும் பணி நேற்று முன்தினம் தொடங்கப்பட்டு உள்ளது. முதற்கட்டமாக ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி ஆகிய தாலுகாக்களில் விவசாயிகளின் வங்கி கணக்கு மூலம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

கோவில்பட்டி, விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம் மற்றும் எட்டயபுரம் ஆகிய தாலுகாக்களில் பயிர் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு விரைவில் நிவாரணத் தொகை அவர்களது வங்கி கணக்கு மூலம் வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு மாவட்ட கலெக்டர் ஆஷிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இரண்டாம் பசுமை புரட்சியை ஏற்படுத்த பாசன நீர் மற்றும் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வது அவசியமாகும்.

அதைக்கருத்தில் கொண்டு, மின்சாரத்திற்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்ற இந்தச் சூழ்நிலையில், வேளாண் பாசனத்திற்கு ஒரு சிறந்த மற்றும் நிரந்தரத்தீர்வு காணும் வகையில், சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கவும், அதனுடன் நுண்ணீர் பாசன அமைப்புகளை இணைத்தும் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது.

<u>2,000 பம்பு செட்டுகள்</u>

2013–2014–ம் நிதியாண்டில், வேளாண்மைத்துறை மூலம் விவசாயிகளுக்கு குழாய் கிணறு, ஆழ் குழாய் கிணறு, திறந்தவெளி கிணறு மற்றும் தரை மட்ட நீர்தேக்க தொட்டியிலிருந்து நீரை இறைக்க ஏதுவாக, 80 விழுக்காடு மானியத்துடன் கூடிய, 5 குதிரைத்திறன் கொண்ட சூரிய சக்தியால் இயங்கும் சூரிய ஒளியினை முழுமையாக தொடர்ந்து பெற ஏதுவாக, நகரும் வகையில், அமையும் சூரிய தகடு பயன்படுத்தப்படும் 2,000 ஏ.சி பம்பு செட்டு அமைப்புகளை வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், தற்போதுள்ள நுண்ணீர் பாசன அமைப்புகளை நடைமுறையில் உள்ள நெறிமுறைகள் மற்றும் பயிர்களுக்கு ஏற்ற முதன்மை தொழில் நுட்பங்கள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது.

<u>80 சதவீத மானியத்துடன்</u>

ஒரு அமைப்பிற்கான செலவு தோராயமாக 5 லட்சம் ரூபாய் ஆகும். இதில் அரசு மானியம் 80 விழுக்காடு, அதாவது 4 லட்சம் ரூபாய் ஆகும். விவசாயியின் பங்களிப்பு 20 விழுக்காடு, அதாவது ஒரு லட்சம் ரூபாய் ஆகும். இதற்கென அரசுக்கு 100 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

விவசாயிகளின் பங்களிப்பான 20 விழுக்காடு தொகையை விவசாயிகள் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு ஏதுவாக, தேவைப்படும் விவசாயிகளுக்கு நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு கூட்டுறவு வங்கிக் கடன் வசதி பெறவும் ஏற்பாடு செய்து தரப்படும்.

இத்திட்டம், விவசாயிகளுக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு உகந்த சூரிய சக்தியினை பயன்படுத்திடவும், நுண்ணீர் பாசனம் மூலம் பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்திடவும், வேளாண் பயிர்களில் உயரிய சாகுபடி முறைகள் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் பசுமை குடில் மற்றும் நிழல் வலை முறையில் சாகுபடி போன்ற பல்வேறு நவீன தொழில் நுட்பங்களுடன் உயர் மகசூல் ரகங்களையும் பயன்படுத்தி, அதன் மூலம் உற்பத்தியினை அதிகரித்து, விவசாயிகளின் வருமானத்தினை உயர்த்திடவும் இத்திட்டம் வழிவகை செய்யும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்–அமைச்சர் ஜெயலலிதா பேசினார்.

**வேளாண் விளைபொருள் பயன்பாட்டு விழிப்புணர்வு பேரணி**

கும்மிடிப்பூண்டி,

வேளாண்மைத்துறை சார்பில் பாரம்பரிய வேளாண் விளை பொருட்கள் பயன்பாட்டு விழிப்புணாவு பேரணி கும்மிடிப்பூண்டியில் நடைபெற்றது. வேளாண் உதவி இயக்குனர் சண்முகையா தலைமையில் நடைபெற்ற இந்த விழிப்புணாவு பேரணியை கும்மிடிப்பூண்டி தாசில்தார் அப்துல்ரகீம் கொடியசைத்து தொடங்கி வைத்தார். துணை வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன், உதவி வோளண்மை அலுவலர்கள் விஜயலட்சுமி, சிவசங்கரி, சிவக்குமார், தோட்டக்கலைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் தினகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கும்மிடிப்பூண்டி பஸ் நிலையத்தில் தொடங்கிய இந்த பேரணி கோட்டக்கரையில் உள்ள வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் முடிவடைந்தது. இதில் மகளிர் குழுவை சேர்ந்த பெண்கள், விவசாயிகள் பெருமளவில் கலந்து கொண்டு பாரம்பரிய வேளாண் விளைபொருட்கள் பயன்பாடு குறித்து பொதுமக்கள் மத்தியில் பிரசாரம் செய்து அதற்கான துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்தனர்.

**வனவிலங்குகளால் பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.4Ñ லட்சம் நிவாரண உதவி**

**கலெக்டர் விஜய்பிங்கேள வழங்கினார்**

திருவண்ணாமலை,

திருவண்ணாமலை மாவட்டத்தில் வன விலங்குகளால் பயிர் சேதம் அடைந்த விவ சாயிகளுக்கு ரூ.4Ñ லட் சம் நிவாரண உதவித் தொகையை கலெக்டர் விஜய்பிங்கேள வழங்கி னார்.

விலங்குகளால் பாதிப்பு

திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் வன விலங்குகளால் பாதிக் கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட வன அலுவலர் நாக நாதன் முன்னிலை வகித் தார்.

வனச்சரகர் கருணாமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண் டனர். திருவண்ணாமலை, புதுப்பாளையம், தானிப்பாடி, செங்கம், சாத்தனூர் வனச் சரகங்களுக்கு உட்பட்ட சொர கொளத்தூர், ஆண்டாப்பட்டு, புதூர் செங்கம், ஆதமங்கலம், மேல்ராவந்தவாடி, வெங்காய வேலூர், முன்னூர் மங்கலம், அடிவாரம், வீராணம் உள் ளிட்ட 20க்கு மேற்பட்ட கிராமங்களில் யானைகள் காட்டு பன்றி உள்ளிட்ட வன விலங்குகளால் பயிர் சேதம் ஏற்பட்டு 52 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ரூ.4Ñ லட்சம் நிவாரணம்

அவர்களுக்கு வனத்துறை சார்பில் ரூ.4Ñ லட்சம் நிவா ரண உதவியை கலெக் டர் விஜய்பிங்ளே வழங்கி னார்.
அப்போது யானைகள் கிராமங்களுக்குள் நுழை வதை நிரந்தரமாக தடுக்கவும், காட்டு பன்றிகளின் தொல்லை களில் இருந்து பயிர்களை காப்பாற்ற சூரிய சக்தி தடுப்பு வேலி அமைக்கவும் நடவ டிக்கை எடுக்குமாறு விவசாயி கள் கோரிக்கை வைத்தனர்.

**முட்நாட்டூரில் விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் பவர்டில்லர் உழவர்பெருவிழாவில் வழங்கப்பட்டது**

போளூர்

முட்நாட்டூரில் நடந்த உழவர் பெருவிழாவில் பழங்குடியினர் விவசா யக்குழுவிற்கு 100 சதவீத மானியத்தில் பவர்டில்லர் வழங்கப்பட்டது.

**உழவர் பெருவிழா**

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலை வட்டாரம் முட்நாட்டூர் கிரா மத்தில் உழவர் பெருவிழா நடந்தது. விழாவுக்கு ஜமுனா மரத்தூர் ஒன்றியக்குழு தலை வர் ராஜமாணிக்கம் தலைமை தாங்கினார். மாவட்ட கவுன் சிலர் மணி, ஊராட்சி மன்ற தலைவர் செல்லன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி வேளாண்மை அலுவலர் மரியஜோசப் வரவேற்றார்.

போளூர் வேளாண்மை உதவி இயக்குனர் கோ.கண் ணகி கலந்து கொண்டு வேளாண்மைத்துறையில் விவசாயிகளுக்கான மானிய திட்டங்கள் பற்றி விளக்கி னார். திருந்திய நெல்சாகுபடி பற்றி வேளாண்மை அலுவலர் சித்ராவும், தோட்டக்கலைத் துறையில் விவசாயிகளுக் கான திட்டங்கள் பற்றி திருவேங்கடமும், பொறியி யல் துறை சார்பில் இளநிலை பொறியாளர் ரங்கநாதனும் விளக்கினர்.

**பவர் டில்லர்**

விழாவில் கும்பலூர் கிரா மப்பழங்குடியினர் விவசாய குழுவிற்கு 100 சதவீத மானி யத்தில் பவர் டில்லரை ஒன்றி யக்குழு தலைவர் ராஜ மாணிக்கம் வழங்கினார். மானிய விலையில் உயிர் உரங்கள், நுண்ணூட்டச் சத்து கலவைகளும் வழங்கப் பட்டது.

முடிவில் அட்மாதிட்ட வட் டார தொழில்நுட்ப மேலா ளர் செல்வபாண்டியன் நன்றி கூறினார்.

தினகரன்

**கர்நாடக தோட்டக்கலை துறை தீவிரம் ஊட்டியில் மேலும் ஒரு புதிய பூங்கா**



ஊட்டி: சர்வதேச சுற்றுலா நகரமான ஊட்டியில் தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, படகு இல்லம், மரவியல் பூங்கா மற்றும் தொட்டபெட்டா போன்ற சுற்றுலா தலங்கள் உள்ளன. இங்கு நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்துச் செல்கின்றனர். இதுதவிர காட்டேரி பூங்கா, சிம்ஸ் பூங்கா போன்றவை குன்னூரில் உள்ளது.எனினும், புதிய சுற்றுலா தலங்களை உருவாக்க வேண்டும் என சுற்றுலா பயணிகள் வலியுறுத்தி வருகின்றனர். சுற்றுலா பயணிகளின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், தற்போது கர்நாடக மாநில தோட்டக்கலைத்துறை சார்பில் ஊட்டியில் சுமார் 50 ஏக்கர் பரபரப்பளவில் பூங்கா அமைக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது. இதற்காக ஊட்டி அருகே மஞ்சனக்கொரை பகுதியில் கர்நாடக மாநில தோட்டக்கலை துறைக்கு சொந்தமான இடத்தில் தற்போது பூங்கா அமைக்கும் பணிகள் துவக்கப்பட்டுள்ளது. தற்போது நிலம் சமன்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பருவமழை துவங்கியவுடன் மலர் செடிகள் நடவு பணிகள் துவக்கப்படும் என கூறப்படுகிறது.இந்த பூங்காவில் அனைத்து வகையான மலர் செடிகள் மற்றும் ரோஜா செடிகள் நடவு செய்யப்படவுள்ளதாக கூறப்படுகிறது. பூங்காவின் மையப் பகுதியில் பெரிய புல் மைதானமும் அமைக்கப்படவுள்ளது. அடுத்த ஆண்டு கோடை சீசனுக்குள் பூங்காவை தயார் செய்யவும், கர்நாடக அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிகிறது.

**அரிசி இறக்குமதியில் சீனா முதலிடம்**



பீஜிங் : அமெரிக்க வேளாண் துறை வெளியிட்ட அறிக்கையில், "சீனா வின் அரிசி இறக்குமதி இந்த ஆண்டில் 30 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டில் 23 லட்சம் டன்னாக இருந்தது. 2011ம் ஆண்டுக்கு முன்பு உள்ள 5 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் அரிசி இறக்குமதி 4.5 லட்சம் டன் அளவுக்கு அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அரிசியை அதிகமாக இறக்குமதி செய்யும் நாடான நைஜீரியாவை பின்னுக்கு தள்ளிவிட்டு சீனா முதலிடம் பிடிக்க லாம் என்று சீன பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.
ஆனால், "சீனாவில் அரிசி உற்பத்தியில் குறையவில்லை. உள்நாட்டு அரிசியை விட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் அரிசியின் விலை குறைவாக இருப்பதால் இறக்குமதி அதிகரிக்கிறது" என்று சில வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

**வேளாண் பொருட்களை பயன்படுத்த வலியுறுத்தி வேளாண் துறையினர் விழிப்புணர்வு பேரணி**

பென்னாகரம், : தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டம் கடமடை கிராமத்தில் வேளாண் துறை சார்பில் உழவர் பெருவிழா நடந்தது. விழாவை தோட்டக்கலை உதவி இயக்குநர் முகுந்தன் தொடங்கி வைத்தார். விழாவிற்கு சிறப்பு பார்வையாளராக வேளாண்மை இணை இயக்குநர் மனோகரன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி பேசியதாவது:
தற்போதுள்ள சூழ்நிலையில் விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தினால் மட்டுமே உற்பத்தியை அதிகரிக்க முடியும். எனவே, விவசாயிகள் கண்டிப்பாக புதிய யுத்திகளை கடைபிடித்து உற்பத்தியை அதிகரிக்க முயற்சிக்க வேண்டும்.
மேலும், சொட்டுநீர் பாசனம், நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திருந்திய நெல் சாகுபடி துவரையில் நாற்றுநடவு முறை போன்ற தொழில்நுட்பங்களை விவசாயிகள் தவறாமல் கடைபிடித்து உற்பத்தியை 2 மடங்காக உயர்த்த வேண்டும்.
இவ்வாறு அவர் பேசினார்.
விழாவில், பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலைய சங்கீதா கலந்து கொண்டு பேசும்போது,

கோதுமை சாகுபடி செய்ய புதிய ரகம் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து பேசினார்.
விழாவில் வேளாண் செயற்பொறியாளர் அறிவழகன், பட்டு வளர்ச்சி துறை அலுவலர், வேளாண் விற்பனை அலுவலர், மீன்வளத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டு தங்கள் துறை ரீதியான திட்டங்கள், மானியங்கள் குறித்து எடுத்துரைத்தனர்.
துணை வேளாண் அலுவலர் ராமநாதன் நன்றி கூறினார்.
விழா ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சரவணன், கணபதி, உதவி வேளாண் அலுவலர்கள் முருகேஷ், பன்னீர், மாதேஸ், கோவிந்தன், பெரியசாமி மற்றும் மாதப்பன் ஆகியோர் செய்திருந்தனர்.
இந்தநிகழ்ச்சியையொட்டி, பாரம்பரியம்மிக்க வேளாண் பொருட்களான சீவக்காய், பருத்தி, இளநீர், சிறு தானியங்களை மக்கள் மீண்டும் வழக்கத்திற்கு கொண்டு வந்து பயன்படுத்த வலியுறுத்தி வேளாண் துறை சார்பில் விழிப்புணர்வு பிரசார பேரணி நடந்தது.

**ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வரத்துகுறைவால்காய்கறிவிலைஉயர்வு**

ஒட்டன்சத்திரம், : வரத்து குறைவால் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் காய்கறி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கிலோ ரூ.20 வரை விற்ற சின்னவெங்காயம் தற்போது கிலோ ரூ.55க்கு விற்பனை செய்யப்படுகிறது.
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் காந்தி காய்கனி மார்க்கெட்டில் தினமும் இங்கு ரூ.4 கோடி முதல் ரூ.5 கோடிவரை வர்த்தகம் நடைபெறுகிறது. தற்போது கடுமையான வறட்சி நிலவுவதால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு காய்கறி உற்பத்தி மிகவும் குறைந்து விட்டது. தினமும் 1500 டன் முதல் 2000 டன் வரை வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்டு வந்த காய்கறிகள், தற்போது 500 டன் னாக குறைந்து விட் டது. வரத்து மிகவும் குறைந்துள்ளதால் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கிலோ ரூ.20 வரை விற்ற சின்னவெங்காயம் தற்போது ரூ.55 ஆக அதிகரித்துள்ளது.
இதேபோல் ரூ.20க¢கு விற்ற உருண்டை மிளகாய் தற்போது ரூ.60 ஆகவும், ரூ.7 முதல் 10 வரை விற்பனையான சம்பா மிளகாய், ரூ.34 ஆக வும், ரூ.10க¢கு விற்ற தக¢காளி ரூ.30க்கும், ரூ.20க¢கு விற்ற பீன்ஸ் தற்போது ரூ.100க¢கும், ரூ.15க்கு விற்ற புஸ்பீன்ஸ் ரூ.70க¢கும், ரூ.10க¢கு விற்ற கத்தரி ரூ.40க்கும், ரூ.7க¢கு விற்ற முருங்கைக்காய் ரூ.13க்கும் விற்பனையாகிறது. இந்த விலை உயர்வால் பொதுமக¢கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். நல்ல விலை இருந்த போதும் காய்கறி விளைச்சல் இல்லாததால் விவசாயிகளுக¢கு எவ்வித பயனும் இல்லை.
ஒட்டன்சத்திரம் பகுதி யில் போதியளவு மழை இல்லாததால் காய்கறி உற்பத்தி மிகவும் குறைந்து விட்டது. மேற்குத்தொடர்சி மலைப்பகுதிகளில் உள்ள ஆடலூர், பன்றி மலை, பண்ணைக¢காடு, கொடைக¢கானல், பாச்ச லூர், வடகாடு ஆகிய மலைப்பகுதிகளில¢ இருந்தே காய்கறி சிறிதளவு வரத்து உள்ளது. எப்போதும் பரபரப்பாக இருக¢கும் காய்கறி மார்க்கெட் தற்போது

பரபரப்பில்லாமல் காணப்படுகிறது. இன்னும் 3 மாதத்திற்கு இந்த விலை உயர்வு இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**வறட்சி நிவாரண உதவி தொகைக்கான ரசீது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது**

திண்டுக்கல், : வறட்சி நிவாரண உதவித் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டு அதற்கான ரசீதுகள் விவசாயிகளிடம் வழங்கப்பட்டன.
தமிழக அரசு மக்களைத் தேடி வருவாய்த்துறை என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன்படி மாவட்டத்தில் உள்ள 358 வருவாய் கிராமங்களில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் வருவாய்த்துறையினர் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று பொதுமக்களிடம் இருந்து மனுக்களைப் பெற்று அன்றைய தினமே மனுக்களின் மீது உடனடி தீர்வு காணப்பட்டு வருகிறது. இதன்படி நேற்று ஒட்டன்சத்திரம் வட்டம் விருப்பாட்சி கிராமத்தில் இதற்கான முகாம் நடைபெற்றது. கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். இதில் பொதுமக்களிடம் இருந்து முதியோர் உதவித் தொகை, வறட்சி நிவாரண உதவித் தொகை, குடும்ப அட்டை, சாதிச்சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து 121 மனுக்கள் பெறப்பட்டன.
வேளாண்மை கூட்டுறவு வங்கியின் மூலம் வறட்சி நிவாரண உதவித் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கான ரசீதுகள் 9 விவசாயிகளிடம் இந்த முகாமில் வழங்கப்பட்டது.
நிகழ்ச்சியில் நிலஅளவை உதவி இயக்குநர் பொன்ராஜ், தாசில்தார் விஜயலட்சுமி, ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையர் ஜோதிகுமார், அலுவலக மேலாளர்(பொது) தெய்வேந்திரன், விருப்பாட்சி சிற்றூராட்சித் தலைவர் சந்திரன், ஒன்றியக்குழுத் தலைவர் பழனிவேல்ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**சூறை காற்று, மழைக்கு பல லட்சம் சேதம் அரசு நிவாரணம் வழங்கிட விவசாயிகள் கோரிக்கை**

ஓசூர், : ஓசூர் சுற்று வட்டார பகுதிகளில் சூறை காற்றுடன் பெய்த பலத்த மழைக்கு பசுமை குடில்கள், மின்கம்பங்கள், கட்டிடங்கள் சாய்ந்ததில் சுமார் ரூ.20 லட்சம் மதிப்பிலான பொருட்கள் சேதம் அடைந்தன. இதற்கு உரிய நிவாரணம் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.
கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே உள்ள தம்மநாயகனப்பள்ளி, வெங்கடேஸ்புரம், ஆலுஈர் உட்பட பல பகுதிகளில் நேற்றும், நேற்று முன்தினமும் (சனி, ஞாயிறு) பலத்த சூறை காற்றுடன் மழை பெய்தது. இந்த சூறை காற்றுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட மரங்களின் கிளைகள் ஒடிந்து சாலைகளில் விழுந்தன. மரங்கள் சாய்ந்தன. மேலும், ஓசூர் சுற்று வட்டார பகுதிகளில் பல விவசாயிகளின் பசுமை குடில்கள் சேதம் அடைந்துள்ளன.
இதுகுறித்து விவசாயி மஞ்சுநாத் கூறும்போது, ஓசூர் தேன்கனிக்கோட்டை தாலுகா பகுதிகளில் பல விவசாயிகள் பசுமை குடில்கள் அமைத்து ரோஜா, குடை மிளகாய், ஜர்பரா போன்றவற்றை பயிர் செய்து வருகின்றனர். மேலும், இந்த பகுதியில் விளையும் விளைபொருட்கள் பல வெளி

நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில், சூறை காற்றால் விவசாயிகளின் பசுமை குடில்கள் பல லட்சம் வரை சேதம் அடைந்து நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனால், அரசு விவசாயிகளுக்கு உதவிட வேண்டும்.
இவ்வாறு அவர் கூறினார்.

**போச்சம்பள்ளியில் பேரணி பாரம்பரிய வேளாண் பொருட்கள் மகத்துவம் குறித்து விழிப்புணர்வு**

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளியில் பாரம்பரிய வேளாண் பொருட்களின் மகத்துவம் குறித்து விழிப்புணர்வு பேரணி நடந்தது. முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சசிகலா அர்சுணன், யூனியன் கவுன்சிலர் புனிதவதி நாகராஜ் முன்னிலை வகித்தனர். விவசாய சங்க தலைவர் முனிரத்தினம் பேரணியை துவக்கி வைத்தார். வேளாண்மை உதவி இயக்குனர் ஸ்டீபன் ஜெயகுமார் இளநீரின் மகத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

பஸ் நிலையத்தில் துவங்கிய பேரணி, வடம்பலம்பட்டி. தாலுகா அலுவலகம், சந்தைபேட்டை, நான்கு ரோடு, வழியாக சென்றது. அப்போது பருத்தி ஆடைகளின் பயன்பாடுகள் குறித்து துண்டு பிரசுரங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. இன்று(15ம் தேதி) பாளேத்தோட்டத்திலும், நாளை (16ம் தேதி) பாரண்டபள்ளியிலும், 17ம் தேதி காலை ஜிங்கல்கதிரம்பட்டியிலும், மாலை தாதம்பட்டியிலும், 18ம் தேதி காலை ஆளோர்ஹள்ளியிலும், மாலை மதிநாயக்கன்பட்டியிலும் நடக்கும் உழவர் பெருவிழாவில் பாரம்பரிய வேளாண் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பாரம்பரியம் மிக்க வேளாண் பொருட்களின் கண்காட்சி ஏராளமானோர் பார்த்தனர்**

கரூர், : வேளாண்மைத்துறை சார்பில் பாரம்பரியமிக்க வேளாண் பொருட்கள் விழப்புணர்வு கருத்தரங்கம் நேற்று கரூர் ஆர்த்தி ஓட்டலில் நடைபெற்றது. வேளாண் பொருட்கள் கண்காட்சி வைக்கப்பட்டிருந்தது. இதனை கலெக்டர் ஜெயந்தி பார்வையிட்டார். பின்னர் வேளாண் பொருட்களின் பயன்பாடு மற்றம் முக்கியத்துவம் பற்றிய விளக்க கையேட்டினை வெளியிட்டார். நிகழ்ச்சியில் கலெக்டர் பேசியதாவது:

பாரம்பரியமிக்க வேளாண் பொருட்களின் பயன்பாடு மற்றும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு கண்காட்சியும், கருத்தரங்கமும் நடத்தப்படுகிறது. வரும்கால சந்ததியருக்கு இதனை தெரிவிப்பது நமது கடமை.

நாட்டில் 70 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் விவசாயம் மற்றும் விவ சாயம் சார்ந்த பிற தொழில்களை சார்ந்தே உள்ளனர். பாரம்பரியமிக்க இளநீர், பருத்தி, சீயக்காய், சிறுதானியங்கள் போன்ற பொருட்களை முன்னோர் பெரிதும் பயன்படுத்தினார்கள்.

உணவே மருந்து எனும் பழமொழிக்கேற்ப நமது முன்னோர்கள் மிகவும் சத்து மிகுந்த சோளம், கம்பு, போன்ற சிறுதானியங்களையும் வரகு, கேழ் வரகு, பனிவரகு, சாமை, தினை, குதிரைவாளி போன்ற குறு தானியங் களையும், கைக்குத்தல் அரிசி போன்ற உணவுகளையும் உட்கொண்டு நோயின்றி வாழ்ந்தனர். இளநீர் உட்கொண்டு உடலினை குளிச்சியாகவும், நோய் எதிர்ப்பு

சக்திக்காவும் பயன்படுத்தினர். கோடைக்கு இதம் தரும் பருத்தி ஆடை அணிந்தனர். கூந்தல் பராமரிக்க சீயக்காய் பயன்படுத்தினர்.

முன்னோர்கள் பயன்படுத்திய பாரம்பரியமிக்க வேளாண் பொருட்கள் பலவற்றினை நாம் மறந்துவிட்டோம். அதனால் பலவித நோய்கள் நம்மை ஆட்கொள்கிறது. நோயற்ற வாழ்வுடன் மக்கள் வாழ்வதற்கு அரசு தீவிர தானிய அபிவிருத்தி திட்டத்தினை செயல்படுதுதி வருகிறது. பாரம்பரிய வேளாண் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வினை மக்களிடையே உழவர் பெருவிழா, கருத்தரங்கு போன்ற நிகழ்ச்சிகள் மூலம் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்படுகிறது.

முக்கியத்துவம் மற்றும் மருத்துவ பயன்பாடுகள் கொண்ட உணவு பொருட் களை உட்கொண்டு நோயற்ற வாழ்வுடன் நலமுடன் அனைவரும் வாழவேண்டும் என்றார்.

வேளாண்மைத்துறை இணை இயக்குனர் தெய்வேந்திரன், துணை இயக்குனர்கள் சவுந்தரம், சுப்பிரமணியம், மதனகோபால், ராஜேந்திரன், வேளாண்மை உதவி இயக்குனர் சிவானந்தம், தங்கமுத்து, பாலுசாமி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**மாம்பழத்தில் இருந்து மதிப்பூட்டிய பொருளாக தயாரித்து விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்**

**வம்பன் வேளாண் மைய தலைவர் தகவல்**

புதுக்கோட்டை, : விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் மாம்பழங்களில் இருந்து பல்வேறு மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக தயாரித்து அதிக லாபம் ஈட்டலாம் என வம்பன் வேளாண் அறிவியல் மைய தலைவர் வைரவன் பேசினார்.

வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நேற்று மாம்பழத்திலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவு பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியினை வம்பன் வேளா ண்மை அறிவியல் நிலைய தலைவர் வைரவன் துவக்கி வைத்து பேசியதாவது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் மா மரங்கள் 2,252 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. வருடத்திற்கு 45,040 டன் மாம்பழம் உற்பத்தி ஆகிறது. இதில் பெரும்பாலான அளவு மாம்பழம் கொள்முதல் மற்றும் விற்பனையாகிறது. மிகக் குறைந்த அளவில் 5 சதவீதத்திற்கு கீழே ஏற்றுமதி செய்யப்படுகிறது. மா அறுவடை குறுகிய காலத் தில் மட்டும் உள்ளதால் 25 முதல் 30 சதவீதம் மாம்பழம் வீணாகிபோகிறது.

விவசாயிகள் மிகக் குறைந்த விலைக்கு விற்க நேரிடுகிறது. இதனை கருத் தில் கொண்டு வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தால் ஒரு நாள் இலவச பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாம்பழத்தை கொண்டு பலவிதமான உணவு பொருட்கள் தயாரிக்கலாம். அதிக விளைச்சல் உள்ள காலங்களில் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பழங்களை மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக தயாரித்து அதிக லாபம் ஈட்டலாம். இதற் கான தொழில்நுட்பங்களை விரிவாக தெரிந்து கொள்ள வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தினை அணுகி பயன்பெறலாம் என்றார்.

வேளா ண்மை அறிவியல் நிலையத்தின் உணவியல் துறை உதவிப்பேராசிரியர் கீதா மதிப்பூட்டப்பட்ட பொருட் களை தயாரிக்கும் செய்முறை விளக்கமளித்தார். மேலும் உடனடி பழப் பானம், பழக் கூழ் மற்றும் பதப்படுத்தும் முறை, பழ பவுடர் தயாரித் தல் ஆகியவற்றினை

செய்முறை விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. ஆர்வமுள்ள 3 விவசாயிகள் தொழில் முனைவோராக வழிகாட்டப்பட்டது.

**கம்பத்தில் உழவர் பெருவிழா**

கம்பம், : கம்பம் குலாலர் திருமண மண்டபத்தில் உழவர் பெருவிழா நடந்தது. நகராட்சி துணைத்தலைவர் அபுதாகிர் தலைமை வகித்தார். ஒன்றியக்குழு தலைவர் முருகன், விவசாய சங்க தலைவர் நாராயணன் முன்னிலை வகித்தனர். கலெக்டர் பழனிசாமி, வேளாண் இணை இயக்குனர் சுந்தரம், தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜன், சென்டெக்ட் வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து மற்றும் வேளாண் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். வேளாண் பாரம்பரிய பொருள்கள், தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, வேளாண் பொறியியல், வேளாண் வணிகத்துறை சார்பாக கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**கோடை மழையும் கைவிரிப்பு சிவகாசிஒன்றியத்தில்விவசாயம்கேள்விக்குறி**

சிவகாசி, : சிவகாச¤ ஒன்றிய பகுதியில் 3 ஆண்டுகளாக பருவமழை சரிவர பெய்யவில்லை. இந்தாண்டில் கோடை மழையாவது பெய்யும் என்ற நம்பிக்கையில் இருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

சிவகாசி ஒன்றிய பகுதிய¤ல் 27 ஆயிரத்து 294 ஹெக¢டேர் புஞ¢சை, ஆயிரத்து 328 ஹெக¢டேர் நஞ¢சை நிலத்தில் விவசாய பயிர் சாகுபடி பணிகள் நடந்து வந்தது. கடந்த 2012ம் ஆண்டு 6 ஆயிரத்து 900 ஹெக¢டேர் நிலத்தில் பயிர் சாகுபடி பணிகளை மேம்படுத்த வேளாண் துறையினர் திட்டமிட¢டனர். வடகிழக¢கு, தென¢மேற்கு பருவமழை பொய்த்து போனதால் 2 ஆயிரத்து 800 ஹெக¢டேர் நிலத்தில் மட்டுமே சாகுபடி பணிகள் நடைபெற்றது.

சிவகாசி ஒன்றியம் எரிச்சநத்தம், புதுப்பட்டி, கொத்தனேரி, கவுண்டம்பட்டி, போன¢ற கிராம பகுதிகளில் மட்டும் ஓரளவு நல்ல மழை பெய்தது. இதனால் இப்பகுதி விவசாயிகள் அதிகளவில் நெல் சாகுபடி பணியில் ஈடுபட்டனர்.

ப¤ற இடங்களில் போதிய மழை பெய்யாததால் விவசாய பணியில் பெரும¢ பாதிப்பு நிலவியது. இதனால் பாசன பரப்பு அளவு குறைந்து விட்டது. வேளாண்மை துறையினர் இலக¢கு நிர்ணயித்த ஆயிரத்து 100 ஹெக¢டேர் பரப்பில், 283 ஹெக¢டேர் நிலத்தில் மட்டுமே நெல் சாகுபடி பணிகள் நடைபெற்றது.

சிறு தானிய பயிர்கள் 3 ஆயிரத்து 160 ஹெக¢டேரில் ஆயிரத்து 880 ஹெக¢டேரிலும், பயறு வகைகள் ஆயிரத்து 500 ஹெக¢டேரில் 262 ஹெக¢டேரிலும் சாகுபடி செய்யப்படுகிறது. பருத்தி சாகுபடி 600 ஹெக¢டேரில் 300 ஹெக¢டேரிலும், எண்ணெய் வ¤த்து பயிர் சாகுபடி 500 ஹெக¢டேரில் 103 ஹெக¢டேரிலும், கரும்பு சாகுபடி 50 ஹெக¢டேரில் 45 ஹெக¢டேரிலும் மட்டுமே சாகுபடி பணிகள் நடந்து வந்தது.

சாகுபடி பணியில் பாதிப்பு ஏற்பட்டதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்குள்ளாயினர். கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை சரிவர பெய்யவில்லை. இந்தாண்டு கோடை மழையாவது கை கொடுக்கும் என எதிர்பார்த்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. இதுகுறித்து வேளாண் அதிகாரி ஒருவர் கூறுகையில், ''கடந்த 3 ஆண்டுகளாக பருவ மழை சரிவர பெய்யவில்லை. இதனால் சிவகாசி ஒன்றிய பகுத¤யில் பயிர் சாகுபடி இலகø¢கை எட்ட முடியவில்லை. விவசாயிகளும் பெரும் பாதிப்புகø¢குள்ளாகியுள்ளனர். இந்த ஆண்டு தென் மேற்கு பருவ மழை காலம் முன்கூட்டியே துவங்கும் என விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர். இந்த ஆண்டும் பருவ மழை பெய்யாமல் பொய்த்து போனால் விவசாயம் கேள்விக்குறியாகிவிடும்,''என்றார்.

**கோழிகளுக்கு கோடை பராமரிப்பு முறையை பின்பற்ற வேண்டும் வானிலை மையம் யோசனை**

நாமக்கல், : கோழிகளுக்கு கோடை பராமரிப்பு முறையை பின்பற்ற வேண்டும் என வானிலை மையம் யோசனை தெரிவித்துள்ளது.

நாமக்கல் கால்நடை வானிலை மையம் வரும் 3 நாட்களுக்கான வானிலை அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

நாமக்கல் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வரும் 3 நாட்களும் வானம் லேசான மேமூட்டத்துடன் காணப்படும். 17ம் தேதி 3 மி.மீ மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ வேகத்தில் மேற்கில் இருந்து வீசும். வெப்பநிலை அதிகபட்சமாக 104 டிகிரியும், குறைந்தபட்சமாக 82 டிகிரியும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிக அளவு 76 சதவீதமாகவும், குறைந்த அளவு 28 சதவீதமாகவும் காணப்படும்.

கோடை மழை துவங்கும் வாய்ப்பு உள்ளதால், இதுவரை நிலவி வந்த மிக அதிக வெப்ப அளவுகள் சற்று குறையும். இனி வரும் காலத்தில் காற்றின் ஈரப்பதம் உயர துவங்கும். காற்றின் திசையும் மேற்கில் இருந்து காணப்படும். எனவே தொடர்ந்து கோழிகளுக்கான கோடை பராமரிப்பு முறையை தீவிரமாக பின்பற்ற வேண்டும். உலர்ந்த தீவனம், சோளத்தட்டுகள் மற்றும் வைக்கோல் கால்நடைகளுக்கு அதிக அளவில் கொடுக்கப்படுகிறது. இத்தகைய உலர்தீவனங்கள் உட்கொள்ளும் அளவை அதிகரிக்க ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் சமையல் உப்பு கலந்து உலர்தீவனங்கள் மீது தெளித்து கால்நடைகளுக்கு கொடுக்கலாம்.

இவ்வாறு வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வரத்து குறைவால் தர்பூசணி விலை உயர்வு**

மதுரை, : Ôகோடையின் கொடைÕ என வர்ணிக்கப் படும் தர்ப்பூசணி வரத்து குறைவால் மதுரையில் இதன் விலை உயர்ந்துள்ளது.

ஒவ்வொரு கோடை சீசனிலும் மதுரை ரோடுகளின் ஓரத்தில் தர்ப்பூசணிப் பழங்கள் குவித்து வைக்கப்படும். கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்ட பழத்துண்டுகளுடன், சர்பத் கலந்து கண்ணாடி டம்ளர்களிலும் இப்பழத்தின் ஜுஸ் விற்பனையில் வெளுத்துக் கட்டும். Ôகோடையின் கொடைÕ என வர்ணிக்கப்படும் தர்ப்பூசணிப் பழங்களின் வரத்து இந்த ஆண்டு மிகவும்

குறைந்துள்ளது. இதனால் எப்போதும் இல்லாத வகையில் இப்பழங்களின் விலை உயர்ந்துள்ளது.

இதுகுறித்து பழ வியாபாரி ரமேஷ் கூறுகையில், Ôஅழகர்கோவில் உள்ளிட்ட உள்ளூர் பகுதிகளில் இருந்து மட்டுமல்லாது, திருவாரூர் போன்ற வெளி மாவட்டங்களில் இருந்தும் மதுரைக்கு தர்ப்பூசணிப் பழங்கள் அதிகம் வந்தன. இந்தாண்டு விளைச்சலின்றி வரத்துக் குறைந்து திண்டிவனப் பழங்களே வருகின்றன. விதை குறைந்த இனிப்பான ஸ்ரீலக்ஸ் ரக பழங்கள் வரத்து சுத்தமாக இல்லை. சாதா ரகங்களே வருகின்றன. மே1 முதல் விற்பனையைத் துவக்கியபோதும், விலை உயர்வால் விறுவிறுப்பில்லை. கிலோ பழம் ரூ.15க்கும், ஒரு பீஸ் ரூ.10க்கும், ஒரு டம்ளர் ஜூஸ் ரூ.15க்கும் விற்பதால் மந்த நிலையே இருக்கிறதுÕ என்றார்.